REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மே 10 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 90 இல. 108 | 1932 - 2022 | Tuesday 10, May, 2022 | 12பக்கங்கள் | 40/-




# சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ராஜினாமா



## ஜனாதிபதியிடம் நேற்று கடிதம் கையளிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று பிற்பகல் கையளித்தார். இதனை ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத் உறுதி செய்தார். பிரதமர் பதவி விலகியதையடுத்து முழு அமைச்சரவையும் இராஜினாமா செய்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடி நிலையை அடுத்து காலி முகத்திடல் உட்பட நாடு முழுவதும் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பதவி விலகுமாறு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் பிரதமர் தவிர்ந்த முழு அமைச்சரவையும் இராஜினாமா செய்ததோடு சர்வகட்சி அரசாங்கம் அமைக்க ஜனாதிபதி சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார். இதனை எதிர்க்கட்சிகள் ஏற்காததால் தற்காலிகமாக நான்கு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் பின்னர் இளம் அமைச்சர்கள் உள்ளிட்ட குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தார்.

தொடர்ந்தும் சர்வகட்சி அரசு உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல்களும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. பிரதமர் பதவி விலக வேண்டும் எனவும், விலகக் கூடாது எனவும்

08

# அனைத்து மக்களையும் அமைதி பேணுமாறு ஜனாதிபதி வேண்டுகோள்

## சம்பந்தப்பட்டோர் மீது பாரபட்சமற்ற நடவடிக்கை



வன்முறைகளை கட்சி பேதமின்றி வன்மையாக கண்டிப்பதாகவும் வன்முறைகள் தற்போதைய நெருக்கடிக்கு வன்முறை தீர்வாகாது எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வன்முறைகளை கைவிட்டு அமைதியாக செயற்படுமாறு சகல மக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ள அவர், இந்த நெருக்கடிக்கு தீர்வு காண மக்கள் ஒன்றிணைந்து செயற்படுமாறும் அழைப்பு விடுத்துள்ளார். தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்ட வன்முறைகள் சொத்து சேதங்கள் தொடர்பிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமருக்கு ஆதரவாக அலரி மாளிகையில் திரண்ட சிலர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வோரை தாக்கி அவர்களின் கூடாரங்களையும் பொருட்களையும் சேதமாக்கினர். இதனை தொடர்ந்து மோதல்கள் சொத்து சேதங்கள் ஏற்பட்டன. அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள்

08

## அரசுக்கு எதிராகவும், ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்கள்:

# ரணகளமாகிய காலிமுகத்திடல்






## போராட்டக்காரர்கள் மீது அலரிமாளிகையிலிருந்து சென்ற SLPP ஆதரவாளர்கள் தாக்குதல்

### கைகலப்பு, குழப்பங்களால் சுமார் 140 பேர் வரை காயம்

### வாகனங்கள், கட்டடங்களுக்கும் நாடளாவிய ரீதியில் சேதங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று அரசாங்கத்திற்கு எதிராகவும் அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்ட இரண்டு குழுக்களுக்கிடையில் கைகலப்பு மற்றும் குழப்பகரமான சூழ்நிலை ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதோடு சொத்துக்களும் சேதமாக்கப்பட்டதாக அறிய வருகிறது. இந்த பதற்ற நிலையை அடுத்து நாடளாவிய ரீதியில் நேற்று பிற்பகல் முதல் மறுஅறிவித்தல் வரை பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்களில் சுமார் 140 ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்து சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். பிரதமருக்கு ஆதரவாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், அலரிமாளிகைக்கு முன்பாகவும் காலிமுகத்திடலிலும் போராட்டம் நடத்துவோர் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் கூடாரங்களை சேதமாக்கியதையடுத்து வன்முறை நிலை உருவானது. இதனை தொடர்ந்து இரு தரப்பினரும் காலிமுகத்திடலில் நேரடியாக எதிர்கொண்ட நிலையில் அங்கு குழப்பநிலை ஆரம்பமானது. குழப்பநிலையை கட்டுப்படுத்துவதற்காக

08





### உடன் அமுலாகும் வகையில் நேற்றுமுதல் நாடுபூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல்

# ஆர்ப்பாட்டக்காரர்கள் பயணித்த பஸ்கள் மீது தாக்குதல், தீவைப்பு



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கொழும்பிற்கு ஆதரவாளர்களை ஏற்றி வந்த பல பஸ்கள் மீது கொழும்பில் பல இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மஹரகமவில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், கொழும்பு நகர மண்டபத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு பஸ்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் பொதுஜன முன்னணி ஆதரவாளர்களின் வீடுகள் தாக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது. சில பஸ்கள் மீது தீவைக்கப்பட்டதாகவும் பொஜன பெரமுன உள்ளூராட்சி உறுப்பினர்கள் பயணித்த வாகனங்கள் மீதும் சில இடங்களில் தாக்கப்பட்டுள்ளன. (பா)

# பிரதமர் பதவியை ஏற்க நான் தயார்

## கரு ஜயசூரிய தெரிவிப்பு



அனைவரும் இணங்கினால் சிறந்த செயல் திட்டத்துடன் மிகக்குறுகிய காலத்துக்கு நாட்டின் பிரதமராகத் தயார் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். நாட்டில் அரசியல், பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அனைத்து

08

# ஆர்ப்பாட்டக்காரர் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைதியான போராட்டக்காரர்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை கண்டிப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார். தாக்குதலுக்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஜூலி சுங் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

08

# பால்மாவின் விலை மீண்டும் அதிகரிப்பு

## 01 Kg மா ரூ.600ஆல் கூடியது



இறக்குமதி செய்யப்படும் பால்மா விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 2,545 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் பால் மா, தற்போது

08

# நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம்

## பொலிஸாரின் விடுமுறைகளும் ரத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு உட்பட நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் மற்றும் குழப்பகரமான சூழ்நிலையையடுத்து நாடளாவிய ரீதியில் மறுஅறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டம்

08

## காலிமுகத்திடலில்

# சஜித் பிரேமதாசவை தாக்குவதற்கு முயற்சி



காலி முகத்திடலுக்கு வருகை தந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச மீது நேற்று தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலில் அவரது வாகனமும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்ற கலவரத்தைத் தொடர்ந்து அந்த பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட குழுவினர் அவசரமாக சென்றிருந்தனர்.

இதன்போது, சஜித் உள்ளிட்டோரை அங்கிருந்த ஒரு குழு தாக்கி விரட்டியடித்தது. கற்களாலும் தடிகளாலும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட களத்துக்கு எதிர்க்கட்சித்

08

# ஜனாதிபதி செயலக பிரதேசத்தில் இடம்பெற்ற கலவத்தின் போது...



படங்கள்: ருவன் டி சில்வா, விமல் கருணாதிலக்க, வாசித்த பட்டபெந்தி



IMF நிதிஉதவி தொடர்பான

# இரண்டாம் கட்டப் பேச்சு நேற்று ஆரம்பமானது

இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது தொடர்பான இரண்டாம் கட்ட கலந்துரையாடலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை பிரதிநிதிகளுக்கும் இலங்கை தரப்புக்கும் இடையிலான தொழில்நுட்ப கலந்துரையாடல் நேற்று (09) ஆரம்பமானதுடன், இது தொடர்பான கலந்துரையாடல்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சர்அலி சப்ரி, மற்றும் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு இணையவழி கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளனர்.

அவசர நிதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கை குறித்து இதன் போது கூடுதல் கவனம் செலுத்த எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.

வாஷிங்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அலி சப்ரி தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியத்திடம் அவசர நிதி உதவி வழங்க கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை, நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. (பா)

நெருக்கடி நிலை விரைவில் தீர்க்கப்படும்

# நாட்டுமக்கள் எமக்கு பலமாக தொடர்ந்தும் இணைந்திருப்பர் என்ற நம்பிக்கை எமக்குண்டு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டுமக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு விரைவான தீர்வு காணப்படும் என்றும் நாட்டு மக்கள் தொடர்ந்தும் எம்முடன் பலமாக இணைந்திருப்பர் என நம்புவதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நீண்டகாலமாக நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது என்பதை அனைவரும் அறிவோம்.

நாட்டின் இந்த நிலை தற்போது அரசியல் மற்றும் சமூக நெருக்கடியாக மாறியுள்ளது. பொருளாதார நிபுணர்களின் கூற்றுக்கிணங்க அன்று 1930 காலங்களில் உலகில் நிலவிய நெருக்கடியைப் போன்று 30 மடங்காக தற்போதைய நெருக்கடி உருவெடுத்துள்ளது. அதனால் உலகின் அனைத்து நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. விநியோகம் மற்றும் மூலப்பொருட்கள் வலையமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. உணவு உற்பத்தி பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இத்தகையசூழ்நிலையிலேயே அரசாங்கம் புதிய சவாலை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. கடந்த காலங்களில் நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு செலவிடும் மருத்துவ செலவுகள் இம்முறை ஒரு வருடத்திற்குள் செலவழிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானம் விலக்கப்பட்டுள்ளது. மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்கு நாம் முதலிடம் வழங்கியுள்ளதால் பெருமளவிலானவற்றை நாம் விலக்க நேர்ந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் எமது நாட்டின் பொருளாதாரம் பெரும் சவாலுக்குள்ளாகியுள்ளது.

நெருக்கடியென்பது தீர்வு இல்லாத ஒன்றல்ல. ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் ஹர்த்தால் என்பன கடந்த காலங்களைப் போல் இப்போதும் வழக்கமாகிவிட்டது. எனினும் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் மக்களின் இயல்புவாழ்க்கையை எமக்கு முக்கியமானதே தவிர குறுகிய அரசியல் இலாபத்திற்காக செயற்படுவதல்ல. எதிர்ப்புகள் கிளம்பலாம் எனினும் அவற்றுக்கு தீர்வுபெற்றுக்கொடுக்க எம்மால் முடியவேண்டும். அவ்வாறு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதற்காக நாட்டின் அரசியலமைப்பை மீறி செயற்பட எமக்கு உரிமைகிடையாது. 08

# பொதுத் தேர்தலுக்கான அழைப்பே நெருக்கடிக்கு நிலையான தீர்வு

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டின் நெருக்கடி நிலைக்கு நிலையான தீர்வுகாண்பதற்கு பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுப்பதே தீர்வாக அமைய முடியுமென சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மக்களின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண்பது மற்றும் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவருவதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த காலத்தில் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினால் நிலையான பாராளுமன்றத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் மக்கள் ஐக்கிய முன்னணி தற்போது யோசனைகளை முன்வைத்துள்ளது.

சபாநாயகரின் தலைமையில் கூடவுள்ள கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானத்தை விரைவாக நடைமுறைப்படுத்தி ஜனநாயக பாராளுமன்ற முறைமையை உருவாக்குவது நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிவாயு பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

ஜனாதிபதி பணிப்புரையில் தீர்வு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலையீட்டின் கீழ் இன்றும் நாளையும் கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய பிரதேசங்களுக்கு 15,000 சமையல் எரிவாயு சிலிண்டர்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக லிற்றோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை போதியளவு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் வகையில் பெருமளவு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இல்லையென்றும் அதனைக் கவனத்திற்கொண்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்கு கியூ வரிசையில் நிற்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு லிற்றோ காஸ் நிறுவனம் அறிவுறுத்திருந்தது.

அதேவேளை, புதன் மற்றும் வியாழக்கிழமைகளிலேயே சமையல் எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடையுமென்றும் அதற்கிணங்க எதிர்வரும் வெள்ளிக்கிழமையளவிலேயே சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக நேற்றும் நாடளாவிய ரீதியில் பெருமளவு மக்கள் வரிசையில் காத்திருந்ததாகவும் அதேவேளை, பெற்றோல் டீசல் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதற்காகவும் எரிபொருள் நிலையங்களில் நேற்று பெருமளவு மக்கள் அணிதிரண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மக்களுக்காக வீதிக்கு இறங்க அஞ்சமாட்டேன்

தாக்குதலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்



அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கண்டனம் தெரிவித்துள்ளார். காலி முகத்திடலில் தாம் தாக்கப்பட்டமை தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள அவர் தான் கஷ்டப்பட்டு தப்பியதாகவும் மக்களுக்காக வீதியில் இறங்க பின்வாங்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் கூறியதாவது, "நானும் அங்கு சென்றேன். அந்த நேரத்தில் நான் குண்டர்களால் தாக்கப்பட்டேன். குண்டர்கள், அரச பயங்கரவாதிகள், அரச காட்டுமிராண்டிகள் போன்றோருக்கு பிரேமதாசாக்கள் ஒருபோதும் பயப்படுவதில்லை .

எனது உத்தியோகபூர்வ வாகனத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. கஷ்டப்பட்டு தப்பி வந்தேன்.

கண்ணாடித் துண்டுகள் என்மீது பாய்ந்தன. மக்களுக்காகவே வீதிக்கு வந்தேன். மக்களுக்காக வீதிக்கு வர அஞ்சமாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிட்டம்புவ துப்பாக்கிச்சூட்டில்:

# அமரகீர்த்தி அத்துகோரள MP பலி அவரது பாதுகாவலரும் உயிரிழப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நிட்டம்புவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலன்னறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தில் அவரது பிரத்தியேக பாதுகாப்பு அதிகாரியும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிட்டம்புவ பகுதியில் நேற்று நிலவிய குழப்பகரமான சூழ்நிலையின்போதே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அந்த சம்பவத்தில் மேற்படி இருவரும் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மூவர் உட்பட 6 பேர் மதுபிடிவல ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. அவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன(ஸ)

நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக

# கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று கடும் வாக்குவாதம்

விவாத திகதி குறித்து நாளை தீர்மானம்



அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையும், ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையும் பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் சேர்க்க சபாநாயகர் இணங்கியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கடும் வாக்குவாதங்கள் ஏற்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், 6ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அவசரகால விதிகளும் 10 நாள் அவகாசத்துக்குள் சபை விவாதத்திற்கு சமர்பிக்க வலியுறுத்தப்பட்டது.

விவாதம் நடைபெறும் திகதி குறித்து நாளை புதன்கிழமை தீர்மானிக்கப்படும் எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பை எம்மிடம் ஒப்படைத்துவிட்டு

# இலகுவாக தப்பி விட முடியாது இம்தியாஸ் பாகீர் மாக்கார்



நாட்டை முழுமையாக சீரழித்த பின் பொறுப்பை எம்மிடம் கையளித்து விட்டு இலகுவாக தப்பித்து விடலாம் என்று எவரும் எண்ண கூடாது. இவ்வாறான சந்தர்ப்பவாத, சம்பிரதாய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து , அரசியல் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (8) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் தமது தவறுகளை ஏற்றுக் கொண்டனர். உண்மையில் அது வரவேற்கத் தக்கது. எனினும் தற்போது பாவ மன்னிப்பு கேட்பது பிரயோசனமற்றது. மன்னிப்பு வழங்குவதில் எவ்வித சிக்கலும் இல்லை. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக மக்களின் பணம் வீண் விரயமாக்கப்பட்டுள்ளது. முழு நாட்டையும் சீர்குலைத்துவிட்டு தற்போது எம்மை பொறுப்பேற்குமாறு கூறுகின்றனர்.

நாட்டை தற்போதுள்ள நிலைமையிலிருந்து கட்டியெழுப்புவதற்குச் செல்லும் பாதை அழகானதல்ல. மிகவும் கடினமானதாகும். எவ்வாறிருப்பினும் அந்த சவாலை ஏற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே உள்ளது. எனினும் அரச தலைவரை மக்கள் ஜனநாயக முறைமையில் தேர்தல் ஊடாகவே தெரிவு செய்ய வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பவாத அரசியலுக்கும் , சம்பிரதாய அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். வெறுமனே பதவிகளிலிருந்து விலகி எம்மிடம் பொறுப்பை கையளித்து விட்டு இலகுவாக தப்பித்து விட முடியாது. பொருளாதார மறுசீரமைப்பிற்கு முன்னர் அரசியல் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டும்.

நாம் தற்போது மேற்குலக நாடுகளை பகைத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தியா மற்றும் சீனா என்பன எம்மை சந்தேகத்துடனேயே பார்க்கின்றன.

சர்வதேச நாடுகளுடனான உறவை சுமூகமானதாகக் கட்டியெழுப்ப வேண்டும்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் திறமையுள்ள நிபுணர்கள் உள்ளனர் என்றார்.

கொழும்பு சம்பவங்களின் எதிரொலி

# பல்வேறு பிரதேசங்களிலும் வன்முறை வெடிப்பு

சில பகுதிகளில் துப்பாக்கிச்சூட்டு சம்பவம், வீடுகள், வாகனங்கள் எரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று இடம்பெற்ற சம்பவங்களின் எதிரொலியாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

பொலன்னறுவை பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினரொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, நிட்டம்புவ நகர மத்தியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நபர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீண்டும் ஊர் திரும்பும்போது அவர்கள் பயணித்த பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகலையிலுள்ள அலுவலகம் ஆர்ப்பாட்டக்காரர்களினால் நேற்று தீயிடப்பட்டுள்ளது.

மொரட்டுவை நகரசபைத் தலைவர் சமன்லால் பெர்னாண்டோவின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதனைத்தவிர நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் வீடுகளும் வாகனங்களும் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கிணங்க, நிட்டம்புவ, கடவத்தை, மினுவாங்கொடை, புளத்சிங்கள ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 254.11 | 270.56 |
| கனடியன் டொலர் | 280.80 | 293.66 |
| யூரோ | 385.44 | 400.93 |
| ஜப்பான் யென் | 2.7810 | 2.8886 |
| சிங்கப்பூர் டொலர் | 262.54 | 271.61 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 447.93 | 467.19 |
| சுவிஸ் பிராங்க் | 367.15 | 380.95 |
| அமெரிக்க டொலர் | 361.72 | 374.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 967.44 | கட்டார் ரியால் | 99.57 |
| குவைத் டினார் | 1,188.72 | சவூதி ரியால் | 97.24 |
| ஓமான் ரியால் | 947.41 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 99.30 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 08




# துரதிஷ்டகரமான நிலைமைக்கு காரணமாகியுள்ள செயற்பாடு

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோற்றம் பெற்றுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் பிரதமரையும் அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு கடந்த சில வாரங்களாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப பிரதமர் பதவி விலகவிருந்த சூழலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிர்வாகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களது தலைவர்களும் உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்களும் நாட்டின் பல பிரதேசங்களில் இருந்தும் நேற்று கொழும்புக்கு வருகை தந்தனர். பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்து அவருக்கான தங்கள் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

அதன் பின்னர் அலரி மாளிகையில் இருந்து இவர்கள் வெளியேறினர். என்றாலும் சொற்ப நேரத்தில் ஊர்வலமாக புறப்பட்ட ஸ்ரீ.ல.பொ.பெரமுன உள்ளூராட்சி மன்றங்களது தலைவர்களும் உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்களும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியபடி அலரி மாளிகைக்கு முன்பாக அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சில வாரங்களாக ஈடுப்பட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடாத்தினர். அவர்களது கூடாரங்களையும் தாக்கி சேதப்படுத்தி தீயிட்டு கொழுத்தினர். இதனையிட்டு அலரி மாளிகைக்கு முன்பாக பதற்றத்துடன் கலவர நிலைமை உருவானது.

அதனைத் தொடர்ந்து காலி முகத்திடலில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி சுமார் ஒரு மாத காலமாக முன்னெடுக்கப்படும் அமைதி ஆர்ப்பாட்ட பிரதேசத்திற்கு இவர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டனர். இதன் விளைவாகப் பிரதேசத்தில் பதற்ற நிலைமை அதிகரித்தன. இவர்களைக் கட்டுப்படுத்தி பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த பொலிஸார் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அம்முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

இவ்வாறான சூழலில் காலி முகத்திடல் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பிரதேசத்திற்குள் பொல்லு, தடிகளுடன் பிரவேசித்த இவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களை அடித்து நொக்கி தீயிட்டு கொழுத்தியதோடு அங்கு தொங்க விடப்பட்டிருந்த பதாகைகளையும் கிழித்தெறிந்ததோடு அவற்றுக்கும் தீயிட்டனர். அத்தோடு அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீதும் இவர்கள் தடிகள், பொல்லுகள் கொண்டு தாக்குதல்களை நடாத்தினர். இந்நிலையில் நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் செய்ததோடு நீர்தாரைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதேவேளை பிரதேசத்தில் அமைதி, இயல்பு நிலையை ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, கொழும்பு வடக்கு ஆகிய பிரதேசங்களுக்கு மறுஅறிவித்தல் வரும்வரையும் உடனடியாக பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. என்றாலும் நிலைமை கட்டுக்கடங்காத நிலையில் மேல் மாகாணத்துக்கும் சொற்ப நேர கால இடையில் முழு நாட்டுக்கும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அத்தோடு காலிமுகத்திடலில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டனர். இருநத போதிலும் ஸ்ரீ.ல.பொ. பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களது தலைவர்களும் உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கலவரமாக நடந்து கொண்டன் விளைவாக 130 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் ஸ்ரீ.ல.பொ. பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களது தலைவர்களதும் உறுப்பினர்களதும் அவர்களது ஆதரவாளர்களதும் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சட்டத்தரணிகள், கொழும்பு தேசிய வைத்தியசாலை ஊழியர்கள், தாபல் திணைக்கள ஊழியர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதோடு காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆதரவும் தெரிவித்துள்ளனர். அத்தோடு கண்டி, தம்புள்ள, காலி உட்பட நாட்டின் பலவேறு பிரதேசங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

காலி முகத்திடலிலும், அலரி மாளிகைக்கு முன்பாகவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரிய போராட்டங்கள் பல வாரங்களாக அமைதியான முறையில் இடம்பெற்று வந்தன. இப்போராட்டங்களின் விளைவாக பதற்ற நிலைமையோ கலவர நிலையோ ஏற்படவில்லை.

என்றாலும் ஸ்ரீ.ல.பொ.பெ உள்ளூராட்சி மன்ற தலைவர்களும் உறுப்பினர்களும் அவர்களது ஆதரவாளர்களும் பொறுப்பற்ற முறையில் நேற்று நடந்து கொண்டதன் விளைவாக முழு நாட்டிலும் ஊரடங்கை பிறப்பிக்க வேண்டிய துரதிஷ்டகரமான நிலைமைக்கு இட்டுச் சென்றுள்ளதோடு நாட்டின் பல பிரதேசங்களிலும் கலவர நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அத்தோடு காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டுள்ளவர்களுக்கு ஆதரவாக அதிகளவிலானோர் கூட வேண்டிய நிலைமைக்கும் இட்டுச் சென்றுள்ளது. தற்போது நாட்டில் உருவாகியுள்ள துரதிஷ்டகரமான நிலையையிட்டு அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரும் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். தற்போது உருவாகியுள்ள துரதிஷ்டகர நிலை விரைவாகவும் வேகமாகவும் அமைதிக்கும் இயல்பு நிலைக்கும் திரும்ப வேண்டும் என்பது தான் அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

## நீண்ட நாட்களாக பாரசிட்டமோல் பாவனை:

# மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுவதென்ன?



உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் பாரசிட்டமோல் மாத்திரையை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரிக்கும் என ஆய்வொன்று தெரிவித்துள்ளது. பல மாதங்களாக தொடர்ந்து, இதை எடுத்துக்கொள்ளும் நோயாளிகளுக்கு ஏற்படும் அபாயங்கள் மற்றும் நன்மைகளைப் பற்றி மருத்துவர்கள் சிந்திக்க வேண்டும் என்று எடின்பரோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைவலிக்கும், காய்ச்சலுக்கும் எடுத்துக்கொள்ளும் வலி நிவாரணிகள் பாதுகாப்பானவை என்று அவர்கள் கூறுகின்றனர். இக்கண்டுபிடிப்புகளை உறுதிப்படுத்த நீண்ட காலத்திற்கு அதிகமான நபர்களை வைத்து ஆய்வு செய்ய வேண்டும் என்று ஏனைய நிபுணர்கள் கூறுகின்றனர்.

பாரசிட்டமோல் மாத்திரைகள் உலகம் முழுவதும் உடல் வலிகளுக்கான குறுகிய கால தீர்வாக பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன. நீண்ட காலத்துக்கு பயன்படுத்தவும் நாள்பட்ட வலிக்காகவும் இது பரிந்துரைக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து குறைவான ஆதாரமே உள்ளது.

2018 ஆம் ஆண்டு, ஸ்காட்லாந்தில் உள்ள ஐந்து லட்சம் மக்களுக்கு அதாவது அங்குள்ளவர்களில் ஒவ்வொரு 10 பேரில் ஒருவருக்கு வலி நிவாரணி பரிந்துரைக்கப்பட்டது. அவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் இருந்தால் இந்த ஆய்வின்படி, அவர்கள் அதிக ஆபத்தான நிலையில் இருக்கலாம்.இந்த ஆய்வு 110 தொண்டர்களைக் கண்காணித்தது. அவர்களில் மூன்றில் இரண்டு பேர், உயர் இரத்த அழுத்ததிற்கான மருந்துகளை எடுத்துக் கொண்டனர்.

இந்த ஆய்வில், அவர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு நாளைக்கு நான்கு முறை ஒரு கிராம் பாராசிட்டமோல் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். நாள்பட்ட வலி உள்ள நோயாளிகளுக்கு ஒரு பொதுவான டோஸ் மாத்திரை வழங்கப் பட்டது. அதன் பின்னர், மாத்திரை மாதிரிகள் (dummy pills) அல்லது மருந்துப் போலிகளை (placebo) அடுத்த இரண்டு வாரங்களுக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். பாரசிட்டமோல் மாத்திரைகளால் இரத்த அழுத்தம் அதிகரித்தது என்று இந்த சோதனை மூலம் தெரிய வந்தது. 'மருந்துப்போலிகளை விட, பாராசிட்டமோல் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கான மிக முக்கியமான ஆபத்தான காரணிகளில் ஒன்றாக இது உள்ளது', என்று எடின்பரோ மருந்தியல் நிபுணர் பேராசிரியர் ஜேம்ஸ் டியர் தெரிவிக்கிறார்.

நாள்பட்ட வலி உள்ள நோயாளிகளுக்கு முடிந்தவரை குறைந்த அளவு பாராசிட்டமோல் மாத்திரைகளை உட்கொள்ள பரிந்துரைக்கவும், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மற்றும் இதய நோய் அபாயத்தில் உள்ளவர்களை உன்னிப்பாகக் கண்காணிக்கவும் ஆராய்ச்சியாளர்கள் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். மூட்டு வீக்கம் என்பது பிரிட்டனில் நாள்பட்ட வலிக்கு மிகப்பெரிய காரணங்களில் ஒன்றாகும். வலிக்கு சிகிச்சையளிப்பதற்கு பாதுகாப்பான மருந்துகளும், நல்ல மனநலம் இருப்பதற்கான ஆதரவு மற்றும் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருக்க ஊக்கமளிக்கும் பிற உதவிகளும் தேவை என்று 'வெர்சஸ் ஆர்த்ரிடிஸ்' என்ற ஒரு தொண்டு நிறுவனம் கூறியுள்ளது.

> 'வலி நிவாரண மருந்துகளால் ஏற்படும் அபாயங்களைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், உங்களின் தெரிவுகளை ஆராய ஒரு சுகாதார நிபுணரிடம் பேச வேண்டும்',

'வலி நிவாரண மருந்துகளால் ஏற்படும் அபாயங்களைப் பற்றி நீங்கள் கவலைப் படுகிறீர்கள் என்றால், உங்களின் தெரிவுகளை ஆராய ஒரு சுகாதார நிபுணரிடம் பேச வேண்டும்', என்கிறார் வெர்சஸ் ஆர்த்ரிடிஸில் வாதவியல் ஆலோசனை நிபுணராக உள்ள டொக்டர் பெஞ்சமின் எல்லிஸ்.

மற்றொரு மருத்துவ நிபுணர் அயான் மெக்கின்டயர், 'தலைவலி அல்லது காய்ச்சலுக்கான பாரசிட்டமோல் மாத்திரையின் குறுகிய கால உபயோகத்தைப் பற்றிய விஷயம் அல்ல இது. இதற்கான மாத்திரைகள் நிச்சயமாக நன்மை தரும்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் செயின்ட் ஜோர்ஜ்ஸில் உள்ள மருந்தியல் மற்றும் சிகிச்சை விரிவுரையாளர் டொக்டர் திபேந்தர் கில், மருத்துவ ஆய்வு இதழ் ஒன்று வெளியிட்டுள்ள கட்டுரையில், 'வெள்ளைநிற ஸ்காட்லாந்து மக்களின் இரத்த அழுத்தத்தில் சிறிய அளவிலான, ஆனால், கவனிக்கத் தக்க அதிகரிப்பு கண்டறியப்பட்டுள்ளது என்று தெரிவிக்கிறார். ஆனால் இதில் பலவும் அறியப்படாதவையாக உள்ளன. முதலில், பாரசிட்டமோல் மாத்திரை நீண்ட காலமாக பயன்படுத்துவதால், இரத்த அழுத்தத்தில் காணப்படும் அதிகரிப்பு அப்படியே நிலைத்திருக்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

'இரண்டாவதாக, பாரசிட்டமோல் மாத்திரையைப் பயன்படுத்தி, அதன் காரணமான இரத்த அழுத்தத்தில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்பட்டு, இதய நோய் அபாயத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் உறுதியாக தெரியவில்லை' என்று அவர் கூறுகிறார். நீண்ட காலமாக பாரசிட்டமோல் மாத்திரை பயன்பாட்டிற்கும், அதனால் மாரடைப்பு ஏற்படும் அபாயத்திற்கும் இடையேயான தொடர்பை ஒரு பெரிய அமெரிக்க ஆய்வு கண்டறிந்தது. ஆனால், இதில் ஒன்றுதான் மற்றொன்றை ஏற்படுத்தியது என்பதை நிரூபிக்க முடியவில்லை. ஏனைய சிறிய ஆய்வுகளும் இந்த தொடர்பை உறுதிப்படுத்த முடியவில்லை.

பாரசிட்டமோல் மாத்திரை எவ்வாறு இரத்த அழுத்தத்தை உயர்த்தும் என்பதை தங்களால் விளக்க முடியவில்லை. ஆனால், தங்களின் கண்டுபிடிப்புகள் நீண்ட கால பாரசிட்டமோல் மருந்துகளை பரிந்துரைக்கும் போக்கை மறுபரிசீலனை செய்ய வழிவகுக்கும் என்று எடின்பரோ குழு கூறியுள்ளது.

மேலும் இப்யூபுரூஃபன் (ibuprofen) போன்ற ஸ்டெராய்டல் அல்லாத அழற்சி உண்டாவதை தடுக்கும் (nonsteroidal antiinflammatory) வலி நிவாரணிகளை விட இவை பாதுகாப்பானதாகக் கருதப்பட்டன. அவை சிலருக்கு இரத்த அழுத்தத்தை உயர்த்தின என்று நினைத்தனர். இந்த ஆய்வுக்கு நிதியளித்த பிரிட்டிஷ் ஹார்ட் ஃபவுண்டேஷன், 'பாரசிட்டமோல் மாத்திரை போன்ற ஒப்பீட்டளவில் பாதிப்பில்லாத மருந்துகள் தேவையா? என்பதை மருத்துவர்களும் நோயாளிகளும் தொடர்ந்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளது.

சாதாரணமான, ஆரோக்கியமான இரத்த அழுத்தம் உள்ளவர்களிடம், நீண்ட கால இடைவெளியில், 'பாரசிட்டமோல் மாத்திரை அதிக அளவில் பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்களையும், அதன் நன்மைகளையும் உறுதிப்படுத்துவது அவசியம் என்று ஸ்ட்ரோக் அசோசியேஷனைச் சேர்ந்த டொக்டர் ரிச்சர்ட் பிரான்சிஸ் கூறுகிறார்.

# உலகளாவிய ரீதியில் சமையல் எண்ணெய் பற்றாக்குறை



உலகம் முழுவதும் எண்ணெய் வித்துகள் உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளதால் சமையல் எண்ணெய்க்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக அதன் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. இதனால் பல ஐரோப்பிய நாடுகள் சமையல் எண்ணெய்யை மக்களுக்கு கட்டுப்பாடுகளுடன் விற்பனை செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

சமையல் எண்ணெய்க்கான தேவை உலகலாவிய ரீதியில் அதிகரித்துள்ள போதிலும் அதன் உற்பத்தி குறைவடைந்துள்ளது. இதனால் சமையல் எண்ணெயின் விலை கடந்த பல மாதங்களாக உயர்ந்து வருகிறது. அதிலும் ரஷ்ய – உக்ரைன் போர் காரணமாக சூரிய காந்தி எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.

உலக சூரிய காந்தி எண்ணெய் உற்பத்தியில் 50 சதவீதப் பங்கை உக்ரைன் வகிக்கின்றது. அதேநேரம் உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, உலக சூரிய காந்தி எண்ணெய் வர்த்தகத்தில் 25 சதவீதத்தைக் கொண்டுள்ளது. எனினும் தற்போதைய ரஷ்யா உக்ரைன் போர் காரணமாக சூரிய காந்தி எண்ணெய் உற்பத்தி பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. அத்தோடு ரஷ்யா மீது உலக நாடுகள் விதித்துள்ள தடையின் காரணமாகவும் சூரியகாந்தி சமையல் எண்ணெய் வர்த்தகம் மேலும் சிக்கலான நிலையை அடைந்துள்ளது.

இதேவேளை சோயா அவரை எண்ணெய்க்கும் உலக சந்தையில் பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது. தென் அமெரிக்காவில் நிலவும் வரட்சியான சூழ்நிலையும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகும். இதனால் பிரேசில், ஆர்ஜன்டீனா, பாராகுவே ஆகிய நாடுகளில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் சோயா எண்ணெய் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு, 9.4 சதவீதமாகக் குறைந்துவடைந்துள்ளது. இது கடந்த ஆறு வருடங்களில் மிகவும் குறைவான உற்பத்தியாகும்.



மேலும் கனடாவில் முக்கிய தாவர எண்ணெய்யான ரேப்சீட் எண்ணெய் உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு அங்கு நிலவும் காலநிலை மாற்றம் ஓர் முக்கியமாக காரணமாக விளங்குகிறது. இதனால் அங்கு 50 சதவீத அளவுக்கு உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுபோலவே உலக அளவில் மற்றொரு முக்கிய சமையல் எண்ணெய்யாக விளங்கும் பாம் எண்ணெய் உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இதனை அதிகமாக உற்பத்தி செய்யும் மலேசியா, இந்தோனேசியாவில் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இந்தோனேசியா வருடமொன்றுக்கு சுமார் 30 மில்லியன் தொன் பாம் எண்ணெய்யை ஏற்றுமதி செய்யக்கூடிய நாடாகும். இது உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் தாவர எண்ணெய் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்காகும்.

எனினும் இந்தோனேஷியா 55 சதவீதம், மலேசியா 31.2 சதவீதம், நெதர்லாந்து 3.7 சதவீதம், ஜெர்மனி 1.2 சதவீதம், எஸ்டோனியா 0.7 சதவீதம் ஏனைய நாடுகள் 8.2 சதவீதம் என்றபடி உலகளவில் பாம் எண்ணெய்யை உற்பத்தி செய்யக்கூடியனவாக உள்ளன.

இதேவேளை, உலகலாவிய ரீதியில் தாவர எண்ணெய்க்கான கேள்வி பெரிதும் அதிகரித்துள்ள நிலையில் பாம் எண்ணெய்க்கான கேள்வியும் அதிகரித்து வருகிறது. ஆனால் தேவைக்கு ஏற்ப பாம் எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்வதற்கு தொழிலாளர் பற்றாக்குறையும், எண்ணெய் வித்து உற்பத்தி குறைவும் தடையாக உள்ளன.

இதன் விளைவாக இந்தோனேசியா பாம் எண்ணெய் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அத்தோடு அதன் விலையை பெரிதும் அதிகரித்துள்ள இந்தோனேசியா அதன் ஏற்றுமதியையும் கணிசமான அளவு உயர்த்தியது. இருந்த போதிலும் இந்தோனேசியா பெரும் நெருக்கடிக்கு மத்தியில் பாம் எண்ணெய் ஏற்றுமதிக்கு கடந்த ஏப்ரல் மாத இறுதி முதல் தடை விதித்துள்ளது. ஏற்கனவே ரஷ்யா உக்ரைன் போரால் சூரிய காந்தி எண்ணெய் விலை உயர்ந்துள்ள நிலையில் பாம் எண்ணெய் விலையும் உயர்ந்தால் ஒட்டுமொத்த சமையல் எண்ணெய் விலையும் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

உலக அளவில் சமையல் எண்ணெய் பற்றாக்குறையால் அதன் விலை கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 25 சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக பாம் எண்ணெய் விலை 50 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதேவேளை ரேப்சீட் எண்ணெய் விலை 55 சதவீதமும், தாவர எண்ணெய் விலை 23 சதவீதமும் அதிகரித்துள்ளது. சமையல் எண்ணெய்க்கு ஒரு புறம் விலை உயர்ந்து வருகின்ற அதேநேரம் பற்றாக்குறையும் தொடரக்கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் ஜெர்மனி, பிரிட்டன், துருக்கி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகள் சமையல் எண்ணெய் விற்பனைக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அதன் நிமித்தம் ரேஷன் முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு குடும்பத்துக்கு ஒரு கிலோ என்றபடி சமையல் எண்ணெய் விநியோகிக்கப்படுகின்றன.

உலக அளவில் சமையல் எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை இந்தியா, இலங்கை போன்ற நாடுகளையும் பாதிக்கக்கூடியனவாக உள்ளன.

சமையல் எண்ணெய் பற்றாக்குறை உடனடியாக தீரக்கூடிய வாய்ப்பு இல்லாததால் விலை மேலும் உயரும் ஆபத்து உள்ளது. அதேநேரம் கடந்த சில மாதங்களில் சமையல் எண்ணெயின் விலை இரு மடங்கு விலை உயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சர்வதேச செய்திகள்

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தல் நிறைவு



பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் நேற்று மில்லியன் கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தமது வாக்குகளை அளித்தனர்.

நாட்டின் முன்னாள் சர்வாதிகாரியின் மகன் பெர்டினன்ட் “பொங்கொங்” மக்ரோஸ் ஜூனியருக்கு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பு அதிகம் இருப்பதாக நம்பப்படுகிறது.

அவருக்கு பெரு வெற்றி வாய்ப்பு இருப்பதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இதன்மூலம் 36 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் எழுச்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட மக்ரோஸ் சந்ததியைச் சேர்ந்த ஒருவர் பிலிப்பைன்ஸில் மீண்டும் ஆட்சியை பிடிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு துணை ஜனாதிபதி போட்டியில் மக்ரோஸை குறுகிய வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்த மிதவாதியான லெனி ரொப்ரேடோ அவரது பிரதான போட்டியாளராக உள்ளார்.

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் மகிண்டனாவ் வட்டாரத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 3 பாதுகாவல் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாத நடவடிக்கைகளுக்குப் பெயர்போன மிண்டனாவ் தீவில் வாக்களிப்பு ஆரம்பித்து சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது.

2 நகரங்களில் பல கையெறி குண்டுகள் வெடித்ததைத் தொடர்ந்து அந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

பிலிப்பைன்ஸின் தென்பகுதியில் தேர்தல் தொடர்பான வன்முறைகள் நடப்பது வழக்கமான ஒன்றாக உள்ளது. இந்த தேர்தலில் யார் வெற்றிபெற்றபோதும் கடந்த ஆறு ஆண்டுகள் பிலிப்பைன்ஸில் ஆட்சியில் இருந்த கடும்போக்காளரான ஜனாதிபதி ரொட்ரிகோ டுடர்டேவின் பதவிக் காலம் முடிவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியை தேர்வு செய்வது மாத்திரமன்றி துணை ஜனாதிபதி, செனட்டர்கள், கீழவை உறுப்பினர்கள் மற்றும் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான கீழ்நிலை அதிகாரிகளை தேர்வு செய்வதற்காகவும் மக்கள் நேற்று வாக்களித்தனர்.

## இம்ரான் கான் சொத்துகளை ஆராய மத்திய அரசு முடிவு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் சொத்துகள் மற்றும் வருமான அறிக்கைகளை ஆய்வு செய்ய மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

அதேபோன்று இம்ரான் கானின் பாகிஸ்தான் தஹ்ரிக்கே இன்சாப் கட்சி மத்திய செயலக ஊழியர்கள் நால்வரின் வங்கிக் கணக்குகளை பெறுவதற்கும் அரசு தீர்மானித்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நான்கு கட்சி ஊழியர்களின் தனிப்பட்ட கணக்குக்கு பெரும் தொகை பணம் வந்திருப்பது பற்றி பாகிஸ்தான் மத்திய வங்கியிடம் விளக்கம் கேட்கப்படுவதாக இது தொடர்பான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. இந்த ஆதாரங்கள் அடிப்படையில் கைதி நடவடிக்கைகள் இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## எரிபொருள் விலை அதிகரிப்பு: நைஜீரிய விமான சேவை ரத்து



விமான எரிபொருள் விலை உயர்வு காரணமாக உள்நாட்டு விமானச் சேவைகளை நேற்று திங்கட்கிழமை முதல் நிறுத்துவதற்கு நைஜீரிய விமான நிறுவனங்கள் முடிவுசெய்துள்ளன.

எரிபொருளின் விலை இந்த ஆண்டு மட்டும் சுமார் நான்கு மடங்கு உயர்ந்துள்ளதாக நைஜீரிய விமான நிறுவனங்கள் தெரிவித்தன.

கடந்த பெப்ரவரி மாத இறுதியில் ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுத்ததன் விளைவாக எரிபொருளின் விலை மேலும் உயர்ந்துள்ளது.

நைஜீரியாவில் கடந்த மார்ச் முதல் பல விமானச் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன அல்லது தள்ளிப்போடப்பட்டன. இதற்கு விமான எரிபொருள் பற்றாக்குறையே காரணமாகக் கூறப்பட்டது.

## உக்ரைனுக்கு இந்தியா மனிதாபிமான உதவிகள்



தற்போது இடம்பெற்று வரும் உக்ரைன் மற்றும் ரஷ்ய போருக்கு மத்தியில் உக்ரைனுக்கு அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொண்ட 7,775 கி.கி மனிதாபிமான உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட உக்ரைனுக்கான இந்திய தூதுவர் ஹார்ஷ் குமார் ஜெயின், உக்ரைனிய பிரதி சுகாதார அமைச்சருக்கு இந்த உதவிகளை கையளித்தார்.

கடந்த மார்ச் மாதத்தில் இந்தியா 90 தொன் நிவாரண உதவிகளை உக்ரைனுக்கு வழங்கியதாகவும் அதிக மருந்துகளை வழங்க அவதானம் செலுத்துவதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

## அமெரிக்க முதல் பெண்மணி உக்ரைனுக்கு திடீர் பயணம்



அமெரிக்க முதல் பெண்மணி ஜில் பைடன் முன்னறிவிப்பின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை உக்ரைனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்திருக்கும் வேளையில் உக்ரைனிய மக்களுக்கு ஆதரவளிக்க அவர் அங்கு சென்றுள்ளார்.

உக்ரைனில் தற்காலிகத் தங்குமிடமாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைக்குச் சென்ற ஜில் பைடன், அங்கு உக்ரைனிய முதல் பெண்மணி ஒலெனா செலென்ஸ்காவைச் சந்தித்தார். 47 பிள்ளைகள் உட்பட இடம்பெயர்ந்த சுமார் 163 உக்ரைனியர்களுக்கு அந்தப் பாடசாலை தங்குமிடமாய்ச் செயல்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்டை நாடான ஸ்லோவாக்கியாவில் பயணம் செய்துகொண்டிருந்த ஜில் பைடன், உக்ரைனுக்குச் சென்று செலென்ஸ்காவிற்குப் பூக்கள் வழங்கி அவரை அணைத்துக்கொண்டார்.

உக்ரைனுக்குப் பயணம் மேற்கொள்ள முடிவுசெய்த திருமதி பைடனின் துணிவைத் திருமதி செலென்ஸ்கா பாராட்டினார்.

உக்ரைனில் பயணத்தை முடித்துக்கொண்ட ஜில் பைடன் பின்னர் ஸ்லோவாக்கியாவுக்குத் திரும்பினார்.

## ரஷ்யாவிடம் சரணடைய உக்ரைனிய வீரர் மறுப்பு



மரியுபோல் நகரின் உருக்கு ஆலையில் உள்ள உக்ரைனியப் படை வீரர்கள், ரஷ்யத் தரப்பிடம் சரணடைய முடியாது என்று கூறியுள்ளனர். செய்தியாளர் கூட்டமொன்றில் அவர்கள் அதனைத் தெரிவித்தனர்.

ரஷ்யத் துருப்பினர் தொடர்ந்து உருக்கு ஆலையைத் தாக்குவதாக உக்ரைனிய வீரர்கள் குறிப்பிட்டனர். அந்த ஆலையிலிருந்து அனைவரும் வெளியேறிவிட்டதாக மொஸ்கோவும் கீவும் கூறியிருந்தன. உக்ரைனிய வீரர்கள் அதனை உறுதிப்படுத்தவில்லை.

வெடிகுண்டுகளிலிருந்து பாதுகாப்பு வழங்கும் காப்பறைகளைப் பார்வையிட யாரும் வரவில்லை என்று உக்ரைனியப் படை கூறியது. இந்நிலையில், ரஷ்யா உக்ரைன் மீது முழுமையாகப் போர் தொடுக்கலாம் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன.

தற்போது உக்ரைனில் சிறப்பு இராணுவ நடவடிக்கை மட்டுமே மேற்கொள்வதாக ரஷ்யா கூறிவருகிறது.

அந்த ஊகங்கள் பொய்யானவை என்று ரஷ்யா தெரிவித்தது.

# கிழக்கின் குரல்



## இளைஞர்களை வலுவூட்டும் நிகழ்வு நல்லதொரு முயற்சி

### அக்கரைப்பற்று பிரதேச செயலாளர்



பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர். ரஜாப் தலைமையிலான வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினர் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சனிக்கிழமை (07) விஜயம் செய்த போது. (படம்: பாலமுனை விசேட நிருபர்)

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

“இன்றைய இளைஞர்கள் வீண் கேளிக்கைகளிலும் ஏனைய தேவையற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுக்கொண்டு தமது காலத்தை வீணடித்து வரும் இக்கால கட்டத்தில், இவ்வாறான பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதும் அவர்களை கலந்து கொள்ள வைப்பதும் மிகவும் பிரயோசனமானதாகும்.

இன்றைய இளைஞர்களை நெறிப்படுத்த மேற்கொள்ளும் நல்ல ஒரு முயற்சியாகும் என அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.முஹம்மத் அன்சார் தெரிவித்தார்.




“வீட்டுக்கு நல்ல பிள்ளை, சமுதாயத்திற்கு நல்லமனிதன், நாட்டுக்கு நல்ல பிரஜை”' எனும் தொனிப்பொருளில் இஸ்லாமிய விழுமியங்களுக்கமைவாக அறிவு, ஆளுமை, திறன் அபிவிருத்தி போன்ற துறைகளில் பதின்ம வயதினரை வலுவூட்டும் நிகழ்வில் சிறப்பாக பயிற்சிபெற்ற மாணவர் மாணவியர்களுக்கு சான்றிதழ், விருது வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயிற்சிபெற்ற மாணவர் மாணவியர்களுக்கு சான்றிதழ், விருது வழங்கியதயடுத்து உரையாற்றியபோதே அவர் குறிப்பிட்டார்.

அமைப்பின் தலைவர் எம்.எ.உதுமாலெப்பை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கௌரவ அதிதிகளாக உதவி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எம்.எம்.சித்தி பாத்திமா எ.ஜி.பஸ்மில், அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலை திட்டமிடல் வைத்திய அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலகம், வலயக்கல்வி அலுவலகம் ஆகியவைகளின் வழிகாட்டலில் ஹிரா அமைப்பின் அதிபர் மௌலவி எ.ஜி. அப்துல் றஊபால் வடிவமைக்கப்பட்ட இந்த வலுவூட்டும் நிகழ்வுக்கு இப்பகுதிகளிலுள்ள பல்வேறு பகுதிகளிலுமுள்ள பாடசாலை மற்றும் மதரசாவில் பயிலும் மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு பயிரற்சியை பெற்றுக்கொண்டனர்.

பயிற்சியை பூரணமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதோடு, பயிற்சியின்போது விசேட திறமை காட்டிய மாணவர்களுக்கு விசேட விருதுகளும் வழங்கப்பட்டன. கௌரவ அதிதிகளாக உதவி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எம்.எம்.சித்தி பாத்திமா எ.ஜி.பஸ்மில், அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலை திட்டமிடல் வைத்திய அதிகாரி ஆகியோரும் சான்றிதழ்களை வழங்கினர்.



நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் இடம்பெற்ற வித்தியாரம்ப விழாவிற்கு, பிரதம அதிதியாக வருகை தந்த பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் எஸ்.சிராஜ்தீன் கலந்து கொண்ட போது. (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## கோப்பிரஸ் நிலையங்களால் பொதுமக்களுக்கு அதிக நன்மை

### கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அஸ்மி

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களினால் திறந்து வைக்கப்பட்டுள்ள கோப்பிரஸ் பல்பொருள் விற்பனை நிலையங்கள் மூலம் பொதுமக்கள் அதிகம் நன்மையடைந்து வருவதாகவும், இப்பணி மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை மொத்தம் 16 கோப்பிரஸ் விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மாகாண மட்டத்தில் மேலும் 12 கோப்பிரஸ் விற்பனை நிலையங்கள் எதிர்காலத்தில் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, காரைதீவு, நிந்தவூர், அம்பாறை, உகண, தெஹியத்தக்கண்டி பிரதேசங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, ஏறாவூர், ஓட்டமாவடி, ஈச்சந்தீவு கன்னங்குடா பிரதேசங்களிலும், திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை, கந்தளாய், கிண்ணியா, மூதூர், பதவிசிறிபுர பிரதேசங்களிலும் மொத்தம் 16 கோப்பிரஸ் பல்பொருள் விற்பனை நிலையங்கள் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டு, சேவை வழங்கி வருகின்றன. புதிய கோப்பிரஸ் பல்பொருள் விற்பனை நிலையங்கள் மூலம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பொதுமக்கள் உணவு மற்றும் அத்தியவசிய பாவனைப் பொருட்களை நியாய விலையில் பெற்றுவருவதாகவும், இதுதொடர்பில் மக்கள் பிரஸ்தாபிப்பதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் என்பு முறிவு வைத்திய நிபுணர் டாக்டர் கே. காண்டீபனை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப்.ஏ.ரஹ்மான் தலைமையில் இடம்பெற்ற போது. (படம்: கல்முனை குறூப் நிருபர்)

# மாதாவின் வணக்க மாதத்தில் பாத்திமா அன்னைக்கு திருவிழா

## மே 13ஆம் திகதி கொண்டாடப்படுகிறது

மாதாவின் வணக்க மாதமாக மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள மே மாதம் 13ஆம் திகதி கத்தோலிக்கத் திருச்சபை பாத்திமா அன்னையின் திருவிழாவை கொண்டாடுகின்றது.

போர்த்துக்கல் நாட்டில் அன்னை மரியாள் வழங்கிய காட்சிகள் அவரது தேவ இரகசியம் மிகவும் பிரசித்தமானவை.

திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் அன்னை பாத்திமாவின் மூன்றாவது இரகசியத்தின் நிறைவேறுதலாக கருதப்படுகிறது.

புனித பாத்திமா அன்னை என்ற பெயர் போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா நகரில் 1917 மே 13 முதல் 1917 அக்டோபர் 13 வரையான காலத்தில் மூன்று சிறார்களான லூசியா சான்ட்டோஸ், ஜெசிந்தா மார்ட்டோ, பிரான்சிஸ்கோ மார்ட்டோ ஆகியோருக்கு அன்னை மரியாள் அளித்த காட்சியின் அடிப்படையில் மாதாவுக்கு வழங்கப்பட்ட பெயராகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் மரியன்னை அளித்த காட்சிகளில் சிறப்பு வாய்ந்ததாக பாத்திமா நகர் காட்சி விளங்குகிறது. இரண்டாம் உலகப் போர், ரஷ்ய நாட்டின் மனமாற்றம் ஆகியவை பற்றி பாத்திமா அன்னை வழங்கிய முன்னறிவிப்புகள் அப்படியே பலித்ததால் பாத்திமாஅன்னையின் காட்சி மிகவும் பிரபலமடைந்தது.

பாத்திமா அன்னையின் திருவிழா மே 13ஆந் திகதி கொண்டாடப்படுகிறது,

சிறுவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த கோவா டா இரியாவின் ஒரு புதர் செடியின் மீது ஒளிமயமான ஒரு மேகம் வந்து இறங்கியது அந்த மேகத்தின் மேல் அன்னை மரியாள் தோன்றி காட்சியளித்தார். லூசியா சான்ட்டோஸ், ஜெசிந்தா மார்ட்டோ, பிரான்சிஸ்கோ மார்ட்டோ ஆகிய மூன்று சிறார்கள் அந்தக் காட்சியைக் கண்டனர்.



மரியன்னை அவர்களிடம் "நான் செபமாலை அன்னை" என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார். மேலும், அந்த மூன்று சிறுவர்களும் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் 13ஆந் திகதி அதே இடத்திற்கு வர வேண்டும் என்று மரியாள் கட்டளையிட்டார். ஜூலை 13ஆந் திகதி அன்னை மரியாள் காட்சியளித்த போது சிறுவர்களுக்கு நரகத்தின் கொடிய வேதனைகளைக் காண்பித்தார். "பாவிகள் மனம் திரும்ப செப, தவ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்" என்றும் மரியன்னை அறிவுறுத்தினார். மக்கள் நரகத்தில் விழாமல் இருக்க "ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நரக நெருப்பிலிருந்து எங்களை மீட்டருளும். எல்லாரையும் விண்ணகப் பாதையில் நடத்தியருளும். உமது இரக்கம் யாருக்கு அதிகம் தேவையோ, அவர்களுக்கு சிறப்பாக உதவி புரியும்" என்ற செபத்தை செபிக்குமாறு மரியாள் கற்றுக்கொடுத்தார்.

அக் காட்சியை உறுதிப்படுத்தும் வகையில் அக்டோபர் 13ஆந் திகதி சூரியனில் ஓர் அதிசயம் நிகழும் என்றும் அவர் முன்னறிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் 13ஆந் திகதி லூசியா, ஜெசிந்தா, பிரான்சிஸ்கோ மூவரும் அதிகாரிகளால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். எனவே அன்றைய தினத்துக்கு பதிலாக மரியாவின் விண்ணேற்பு நாளான ஆகஸ்ட் 15ஆந் திகதி சிறுவர்கள் மூவரும் அன்னையின் காட்சியைக் கண்டனர். மக்கள் பலரும் அன்னையின் அற்புதத்தைக் காண இச்சிறுவர்களைப் பின்தொடர்ந்தனர்.

மேலும் அன்னை தனது காட்சிகளின்போது, மனிதரின் தீய நடத்தையையும் இறைவனின் கோபத்தையும் வெளிப்படுத்தினார். மரியாள் காட்சி அளித்த வேளையில் நிகழ்ந்து கொண்டிருந்த முதல் உலகப் போர் விரைவில் முடியப் போவதாகவும் மக்கள் தொடர்ந்து பாவம் செய்தால் அதைவிடக் கொடிய உலகப் போர் மூளும் என்றும் அன்னை எச்சரிக்கை செய்தார். வானில் காரணமின்றி தோன்றும் ஓர் ஒளியே அந்த போருக்கு அடையாளமாக இருக்கும் என மரியன்னை முன்னறிவிப்பு செய்தார்.

கிறிஸ்தவர்கள் செபித்தால் மக்களிடையே (குறிப்பாக ரஷ்யாவில்) மனமாற்றம் நிகழும் என்றும், கிறிஸ்துவை அறியாதவர்கள் விரைவில் மனம் திரும்புவார்கள் என்றும் அன்னை மரியா மொழிந்தார். தலை வணங்கி கடவுளிடம் மன்னிப்புக் கேட்குமாறும் கிறிஸ்துவின் திருச்சிலுவை முன் மண்டியிட்டு செபிக்குமாறும் மரியன்னை அறிவுறுத்தினார்.

1917 அக்டோபர் 13ஆந் திகதி அன்னையின் காட்சியைக் காண சுமார் 70 ஆயிரம் பேர் கூடி இருந்ததாக நம்பப்படுகிறது.

அப்போது வானில் வியத்தகு அதிசயங்கள் தோன்றின. வானிலிருந்து பல வண்ணங்கள் தோன்றி மக்கள் மேல் ஒளிர்ந்தன. கடும் மழை பெய்த வேளையிலும் அன்னை மரியாள் காட்சியளித்த புதரும் 3 சிறுவர்கள் இருந்த இடமும் மட்டும் உலர்ந்தே காணப்பட்டன. மக்கள் பலரும் அன்னை தோன்றிய ஒளிரும் மேகத்தைக் கண்டனர். அப்போது அவர் சிறுவர்களிடம், "மக்கள் செபிக்க வேண்டும்; பாவத்தினால் கடவுளின் உள்ளத்தை புண்படுத்தக்கூடாது" என்று மிகவும் வலியுறுத்தி கூறினார். மக்களின் மனமாற்றத்திற்காக செபமாலை செபிக்க வேண்டுமென்றும் இறுதியில் தனது மாசற்ற இதயம் வெற்றி பெறும் என்றும் மரியன்னை மொழிந்தார்.

சூரியனின் அற்புதம் நிகழ்ந்தபோது சூரியன் மக்களின் கண்களுக்கு குளிர்ந்த நிலவு போன்று தோன்றியது. அது பம்பரம் போல சுழன்றது. இவற்றை அங்கிருந்த அனைவரும் பார்த்தனர். இந்த செய்தி போர்த்துக்கல் நாட்டு பத்திரிகைகள் அனைத்திலும் நிழற்படங்களுடன் வெளிவந்தன. (ஸ)

எஸ்.ஜொனதன்...




## கல்லடியில் இறையிரக்கப் பெருவிழா









இறையிரக்கப் பெருவிழாவை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திரு இருதய நாதர் திருச்சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்தந்தை சுவைக்கீன் ரொஷான் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற விசேட திருப்பலியில் பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார், அருட்பணி ஜேம்ஸ் அடிகளார் இணைந்து திருப்பலியினை ஒப்புக்கொடுத்தனர். பங்கு மக்கள் மற்றும் உட்பட அதிகளவிலான பக்தர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர். (படங்கள்:கல்லடி குறூப் நிருபர்)

# கடவுள் அருளும் அன்பையும் பாதுகாப்பையும் நிலைவாழ்வையும் அனுபவிப்போம்

உலகத்தின் பின்னால் செல்பவர்களாய் நாம் வாழ்ந்தால் கடவுள் தரும் பாதுகாப்பை நம்மால் அனுபவிக்க முடியாது. அவர் வழங்கும் நிலைவாழ்வையும் பெற முடியாது. ஆகவே கடவுள் அருளும் அன்பையும் பாதுகாப்பையும் நிலைவாழ்வையும் பெற்றுக்காள்வது அவசியமாகும்.

கடந்த ஞாயிறை நல்லாயன் ஞாயிறு என்று நாம் அழைக்கின்றோம். இந்த நல்லாயன் ஞாயிறு நமக்கெல்லாம் ஆயனாக விளங்கும் கடவுளின் மந்தையில் இணைந்து அவர் அளிக்கும் அன்பையும் பாதுகாப்பையும் நிலைவாழ்வையும் நிறைவாகப் பெற்றிட நம்மை அழைக்கின்றது.



கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் ஆயனுக்குரிய சிறந்த பண்புகளை நமக்கு எடுத்துரைப்பதாக உள்ளன.


முதலாவதாக அன்பு. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும்." ஒருவர்மீது கொண்டுள்ள அன்பு அவரைப்பற்றி அறிந்து கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டும். இங்கே இயேசு "எனக்கும் அவற்றைத் தெரியும் "என்று கூறுவதன் மூலம் வெளிப்படுத்துவது அவர் தன் ஆடுகளை எந்த அளவுக்கு அன்பு செய்கிறார் என்பதையே.

தாயின் கருவிலேயே நான் உன்னை அறிந்திருந்தேன் என்ற யாவே இறைவனின் வார்த்தைகளின் மறுபிரதியாக இவ்வாக்கு அமைந்துள்ளது.ஆம் நம்மை கடவுள் அவருடைய அன்பின் மிகுதியால் பெயர் பெயராய் அறிந்துள்ளார். அவரிடமிருந்து நாம் எதையும் மறைக்க இயலாது. அவருடைய அன்பை நாம் உணர்ந்திருந்தோமேயானால்நாம்அவருக்குசெவிசாய்க்கும் மக்களாக வாழ்வோம் என்பதில் ஐயமில்லை.

இரண்டாவதாக ஆயன் தரும் பாதுகாப்பு. "என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஆடுகளை என்னிடமிருந்து யாரும் பறித்துச் செல்ல முடியாது என இயேசு கூறுகிறார்.ஆடுகளை ஓநாய் போன்ற கொடிய விலங்குககளிடமிருந்து பாதுகாப்பதே ஒரு ஆயனின் கடமை.அதைப்போல நம் ஆண்டவர் சாத்தானின் சூழ்ச்சிகளும் உலக மாயக் கவர்ச்சிகளும் நம்மை அவரிடமிருந்து பறித்துச் செல்ல இயலாத அளவுக்கு காத்துக்கொள்வார் என்பதை உறுதிப்படுத்துகிறார். அவ்வாறே பாவத்தால் நாம் அவரிடமிருந்து விலகினாலும் நம்மைத் தேடி வந்து மீட்கும் நல்லாயன் அவரே.

மூன்றாவதாக நிலைவாழ்வு. " நான் அவற்றிற்கு நிலைவாழ்வு அளிக்கிறேன்" என்று இயேசு கூறுகிறார். நிலைவாழ்வு என்பது என்ன?

பாவக்கறைகள் நீக்கப்பட்டு தூய ஆன்மாவுடன் ஆண்டவருடைய பிள்ளைகளாக வாழ்வதே உண்மையான நிலைவாழ்வு. தந்தையாம் கடவுள் நம் ஆண்டவர் இயேசுவின் வழியாக இந்த நிலைவாழ்வை உலகனைத்திற்கும் வழங்கியுள்ளார்.



இவ்வாறாக நல்லாயனாய் விளங்கும் நம் ஆண்டவர் அவருடைய மந்தையாகிய நமக்கு தன் முழு அன்பையும் பாதுகாப்பையும் நிலைவாழ்வையும் வழங்குகிறார். இதை அனுபவித்து மகிழ நமக்குத் தேவையானது எது? நல்லாயன் ஆண்டவரின் மந்தையைச் சேர்ந்த ஆடு நான் என்கிற உள்ளார்ந்த உணர்வும் அனுபவமும். ஆம் கடவுளுடைய மக்களாக நம்மை நாம் உணரவில்லை எனில் நம்மால் அவருடைய அன்பை உணரமுடியாது.

உலகத்தின் பின்னால் செல்பவர்களாய் நாம் வாழ்ந்தால் கடவுள் தரும் பாதுகாப்பை நம்மால் அனுபவிக்க முடியாது. அவர் வழங்கும் நிலைவாழ்வையும் பெற முடியாது. ஆகவே கடவுள் அருளும் அன்பையும் பாதுகாப்பையும் நிலைவாழ்வையும் பெற அவருடைய மந்தையின் ஆடுகளாய் மகிழ்வுடன் வாழத் தயாராவோம்.

அருட்பணி
குழந்தை இயேசு பாபு...

யாழ்.போதனா வைத்தியசாலை

# இலவச சுகாதார சேவை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்



யாழ் விசேட நிருபர்

இலவச சுகாதார சேவை கடுமையாக வலுவிழந்து விட்டமையால் நிச்சயம் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் போதனா வைத்தியசாலைக்கிளை தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ் போதனா வைத்தியசாலைக்கிளை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

வடக்கு மாகாண வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சக மருத்துவப் பணியாளர்களும், நிர்வாகப் பணியாளர்களும் இங்கு இன்று ஒரே நோக்கத்திற்காக ஒன்று கூடி இருக்கின்றோம். தங்களது சுயலாப நோக்கங்களுக்காகவும் அதீத சொகுசு வாழ்க்கைக்காகவும் நாட்டு மக்களின் வாழ்வினை சீரழித்து பாரிய மோசடிகளில் ஈடுபடும் அரசியல்வாதிகளை சிறைக்குத் தள்ளி சுபிட்சமான இலங்கையினை கட்டியெழுப்புவதே இங்கு கூடியுள்ள எங்களின் நோக்கமாகும்.

மக்களின் அடிப்படை தேவைகளான உணவு, கல்வி சுகாதாரம் என்பவை எட்டாக்கனியாக்கியுள்ளனர். ஊழல் மோசடிகளின் மூலம் தங்களது வாழ்வும் எதிர்கால தலைமுறையும் சீரழிக்கப்படுவதை உணர்ந்த மக்கள் பெரும் எழுச்சி கொண்டு நாடளாவிய ரீதியில் பெரும் போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர் வைத்திய அதிகாரிகள் சங்கமானது ஏனைய வைத்தியசாலைப் பணியாளர்களையும் இணைத்து மக்களின் எழுச்சிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகிறோம்.

அதன் ஒரு பகுதியாக இன்று வடமாகாணத்தை சேர்ந்த மருத்துவப் பணியாளர்கள் இங்கு ஊழல் அரசாங்கத்திற்கு எதிராகக் குரல்கொடுக்க ஒன்று திரண்டுள்ளோம். இலவச சுகாதார சேவை கடுமையாக வலுவிழந்து விட்டது. இதனால் நிச்சயம் உயிரிழப்புகள் அதிகரிக்கும். சிறுவர்களின் கல்வி சீரழிக்கப்பட்டுள்ளது, சிறுவர்கள் பட்டினியால் வாடுகின்றனர். இதற்குரிய தீர்வாக எதனையும் வழங்க இன்னமும் பாராளுமன்றம் தயாரானதாக தெரியவில்லை. இக்கட்டான, ஆபத்தான காலகட்டத்தில் எமக்கு உதவி புரியும் உள்நாட்டு, வெளி நாட்டு அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கும், இந்தியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைத்து மதங்களும், இனங்களும் சம அந்தஸ்தும், அச்சமுமின்றி வாழும் உரிமையும், அரசியல் உரிமையும் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்பட வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் அனைத்து மக்களும் இனபேதமின்றி மனிதாபிமானத்தை முன்னிறுத்தி நாம் கனவு காணும் இலங்கையினைக் கட்டியெழுப்ப அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்போம் என அவர் தெரிவித்தார்.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

# யாழ்.போதனா வைத்தியசாலை; அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் நிறுத்தம்

யாழ். விசேட நிருபர்

யாழ் போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்

யாழ்.போதனா வைத்தியசாலையின் தற்போதைய நிலை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்தியசாலையினை பொறுத்தவரை நோயாளர்களின் சிகிச்சைக்குரிய மருந்து மற்றும் சத்திர சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களுக்கான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையில் அத்தியாவசியமாக தேவையான சத்திரசிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

ஏனைய சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது அத்துடன் விசர்நாய் கடிக்கான மருந்து தட்டுப்பாடாக இருக்கிறது எனவே பொது மக்கள் கவனமாக மிருகங்களிடம் கடிபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனில் விசர் நாய்க்கடி மருந்து என்பது ஒரு விலை உயர்ந்த மருந்து தாகும் எனவே அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது பொதுமக்கள் மிக கவனமாக இருக்க வேண்டும். அத்துடன் விபத்துக்கள் மற்றும் தேவையற்ற பிரச்சனைகள் மூலம்வைத்தியசாலைக்கு வருவதை தவிர்க்குமாறும் கோருகின்றோம்.

போதுமான அளவு சேவையினை வழங்க முடியாதுள்ளது என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுகாதார கட்டமைப்புகள் சீர்குலைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் எனவும் தெரிவித்தார்.

## மீசாலையில் ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை உழவு இயந்திரம் மோதி விட்டு சாரதி தப்பிசென்றுள்ளார். இச்சம்பவத்தில் 41 வயதான கலைக்குமரன் என்ற நபர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துதொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அர்ச்சகரின் பணம், தொலைபேசி திருட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலைப் பகுதியில் அர்ச்சகர் (மதகுரு) ஒருவரின் பணம் மற்றும் பெறுமதியான தொலைபேசி ஆகியன திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டினையடுத்து மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## நீரில் மூழ்கி மூவர் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பூம்புகார் கடல் மற்றும் மண்கும்பான் சாட்டி கடல் ஆகியவற்றில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

அரியாலை பூம்புகார் கடலில் நீராடிய ஞானகாந்தன் ஜெயமதன் (வயது 36) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். அதேவேளை மண்கும்பான் சாட்டி கடலில் நீராடிய அரியாலையை சேர்ந்த இராசரத்தினம் கணேசராசா (வயது 46) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மேலும் கிளிநொச்சி இரணைமடு குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மயூரன் (வயது 22) என்பவர் குளத்தில் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

## விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி தட்டுப்பாடு

### நாய்களைக் கண்டால் விலகிச் செல்லுமாறு அறிவுறுத்தல்

யாழ்.விசேட நிருபர்

விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துகளான ஏ.ஆர்.வி மற்றும் ஏ.ஆர்.எஸ் போன்றவற்றுக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தட்டுப்பாடு நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏ.ஆர்.வி மருந்துகள் வடக்கு மாகாண மருத்துவமனைகளில் குறிப்பிட்டளவு உள்ள போதும் ஏஆர்எஸ் தடுப்பூசி மருந்துகள் இல்லை என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நாய்களைக் கண்டால் விலகிச் செல்லுங்கள். நாய்க்கடிக்கு உள்ளாகினால் விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து தட்டுப்பாட்டினால் உயிர்களைக் காப்பாற்ற முடியாதுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாய்க்கடிக்கு உள்ளாகியவர்களுக்கு ஏஆர்பி மற்றும் ஏஆர்எஸ் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்படாவிடின் நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகி உயிரிழப்பு ஏற்படும் அபாயம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலாப்பழம் பறிக்க சென்றவர் தவறி விழுந்து மரணம்

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி கிழக்கு பகுதியில் வீட்டு காணியிலிருந்த பலாமரத்தில் பலாப்பழம் பறிக்க ஏறிய முதியவர் ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை பகுதியில் வசித்து வந்த 72 வயதுடைய தம்பாப்பிள்ளை கனகராசா என்பவரே இவ்வாறு தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



மலைச்சாரல்

# நாட்டை பாதாளத்திற்கு கொண்டு செல்லும் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும்

(எம்.ஏ.அமீனுல்லா)

நாட்டின் பொருளாதார நெருக்கடியை அரசியல் நெருக்கடியாக மாற்றி நாட்டை பாதாளத்திற்கு கொண்டு செல்ல செயற்படும் தீவிரவாதம் தோற்கடிக்கப்பட வேண்டுமென தேசிய புத்திஜீவி பிக்கு மன்றத்தின் செயலாளர் கலாநிதி மாதுலுவாவே தம்மிஸ்ஸர தேரர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று (09) மல்வத்து பீடத்தின் பீடாதிபதி வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரை சந்தித்து கலந்துரையாடினர். இதனைதொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கையில்,

'அங்கீகரிப்போம், ஒன்றுசேர்வோம், செயற்படுவோம் இல்லாவிட்டால் அழிந்துவிடுவோம்' என்ற தொனிப்பொருளில் 61 அம்சங்கள் அடங்கிய சமூக உடன்படிக்கையை எதிர்வரும் 12ஆம் திகதி துன்முல்லை சந்தியிலுள்ள சமூக ஜயந்தி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நேரத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதே முதல் படி எனவும், சமூக உடன்படிக்கையில் உள்ள அறுபத்தியொரு பிரேரணைகள் அதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியை சமாளிக்க குறுகிய கால அரசியல் சாசன வேலைத்திட்டம் தேவை. தற்போதைய அனைத்து நெருக்கடிகளுக்கும் டொலர் பற்றாக்குறையே காரணமெனவும் அவர் தெரிவித்தார்.



## எரிபொருளை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் மக்கள்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக அட்டன், மல்லியப்பு பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையவளாகத்தை சூழ, மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

சிறார்கள், யுவதிகள், தாய்மார் மற்றும் முதியவர்கள் என ஆயிரக்கணக்கானோர் நேற்று (09.05.2022) காலை 6 மணி முதல் வரிசையில் நிற்கின்றனர். சில தாய்மார் கைக்குழந்தைகளுடன் வரிசையில் நிற்பதையும் அவதானிக்க முடிந்தது.

வரிசையில் நின்ற முதியவர்களில் சிலர் தமக்கு மயக்கம் வருவதுபோல் இருப்பதாகவும், எனவே, முதியவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர். கைக்குழந்தைகளுடன் வந்திருந்த தாய்மாரும் இதே கோரிக்கையை விடுத்தனர்.

சிறார்கள் பாடசாலைகளுக்கு செல்லாமலும், தோட்ட மக்கள் தொழிலுக்கு செல்ல மண்ணெண்ணைய் வாங்குவதற்காக காலை முதல் வரிசையில் காத்திருக்கின்றனர்.

## வலப்பனை விபத்தில் ஐந்துமாத குழந்தை பலி

வலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீர்த்திபண்டாரபுர பகுதியில் நேற்றுமுன்தினம் (08) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஐந்துமாத குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

வீதி விபத்தில் கண்டியிலிருந்து அதிகாரகமை வழியூடாக பதுளை நோக்கி எட்டு பேர் பயணித்த கார் ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து சம்பவத்தில் ஐந்து மாத குழந்தை ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர். தவிர ஏனையவர்களை காயங்களுடன் பிரதேசவாசிகள் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். மேலும் விபத்துக்குள்ளான கார் வேக கட்டுப்பாட்டை மீறியதால் விபத்து சம்பவித்துள்ளதாக வலப்பனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரத்தில் இவ்விபத்து சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் காரில் பயணித்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர்கள் கொழும்பிலிருந்து வலப்பனை அதிகாரகமை வழியூடாக பதுமையாக நோக்கி பயணித்த வேளையில் வலப்பனை கீர்த்திபண்டாரபுர பொலிஸ் சோதனை சாவடிக்கு அண்மித்த பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் ஊடாக நுவரெலியா கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு நுவரெலியா வலய கல்வி காரியாலத்திலும் தலவாக்கலை தேசிய பாடசாலையிலும் நடைப்பெற்றது. இதன்போது மத்திய மாகாண கல்வி பணிமனையின் ஆங்கில பாட பணிப்பாளர் சாமரி அன்தாஜ், நுவரெலியா கல்வி வலய ஆங்கில பாட உதவி கல்வி பணிப்பாளர் வி.சாந்தகுமார் மற்றும் வளவாளர்கள் உட்பட ஆங்கில ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

## மாத்தளை நகர சபைக்கு செந்தில் தொண்டமான் விஜயம்





மாத்தளை நகர சபையின் மேயராக பணியாற்றி வரும் காங்கிரஸின் உறுப்பினர் பிரகாஷின் அழைப்பையேற்று செந்தில் தொண்டமான் அங்கு சென்றிருந்தார். மாத்தளை மாநகர சபை ஊடாக கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை இதன்போது ஆய்வு செய்தார். காங்கிரஸின் மாத்தளை மாவட்ட மூத்த தலைவர் சிவஞானம், சபை தலைவர் யோகராஜா மற்றும் ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களுடன் மாத்தளை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

# ஜே.வி.பி தலைவர் அநுர கலவர இடத்திற்கு விஜயம்



ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் நேற்று (09) காலி முகத்திடலுக்கு வருகை தந்தனர்.

ஜே.வி.பி.யின் தலைவருடன் கட்சி முக்கியஸ்தர்களான கே.டி. லால்காந்த, சுனில் ஹந்துன்நெத்தி, நலிந்த ஜயதிஸ்ஸ ஆகியோரும் சம்பவ இடத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

காலிமுகத்திடலில் உள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அங்கு பதற்ற நிலை ஏற்பட்ட நிலையில் அப்பகுதியில் நிலவரத்தை கண்காணிக்க அவர்கள் அங்கு வந்ததாக அறிய வருகிறது. (பா)

## காலிமுகத்திடல் வன்முறைக்கு எதிர்ப்பு

# முல்லைத்தீவில் வைத்தியர்கள், ஊழியர்கள் கவனயீர்ப்பு போராட்டம்







**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

காலி முகத்திடல் போராட்டத்தில் அரச ஆதரவு தரப்பால் நடத்தப்பட்ட வன்முறையை கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இருந்து சென்று முல்லைத்தீவு முதன்மை வீதியில் தங்கள் கவனயீர்ப்பினை முன்னெடுத்தனர்.

இதன்போது அகிம்சை போராட்டத்தினை வன்முறையால் அடக்கிய அரசே வெளியேறு,அரச பயங்கரவாதத்தினை எதிர்ப்போம் போன்ற அரசாங்கத்திற்கு எதிரான கோசங்களை தாங்கியவாறு கவனயீர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.

நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடிக்கு எதிராகவும் ஊழல் மிக்க அரசிற்கு எதிராகவும் நடக்கின்ற மக்களின் தன்னெழுச்சி போராட்டத்திற்கு அதில் கலந்து கொண்ட அப்பாவி பொது மக்களை தாக்குவது வேதனைக்குரிய விடயம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பலர் காயப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் அரசினால் மேலும் தொடருமானால் பல்வேறு இடங்களில் மேலதிகமான போராட்டங்கள் தீவிரமடையும்.

இதற்கு காரணமானவர்களை விரைவில் கைதுசெய்து நாட்டிற்கு பொறுப்பு கூறக்கூடிய ஆட்சிமுறைமையினை விரைவில் கொண்டுவர வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.





35வயதுக்கு மேற்பட்ட உடப்பு கிராம மக்களுக்கான இலவச வைத்திய சேவையின் ஒரு கட்டமான இரத்தம், சிறுநீர், சீனி, கொலாஸ்ரோல் போன்றவற்றை பரிசோதனை செய்வது சம்பந்தமான ஒரு விஷேட கலந்துரையாடல் ஆண்டிமுனை பொது வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை, வைத்திய அதிகாரிகள் தலைமையில் இடம்பெற்றது. இதனை உடப்புப் பகுதி வைத்தியசாலை சங்கத் தலைவர் என். கமலேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். பிரிவு முக்கியமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 7 மணியளவில் இடம்பெறும். மக்கள் கட்டம் கட்டமாக வந்து பரிசோதனை செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. இதன் இரத்த மாதிரிகள் புத்தளம் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்படும். பின்னர் அதன் பெறுபேறுகள் உடப்பு வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளதாக வைத்தியர் குறிப்பிட்டார். உடப்பு குறூப் நிருபர்



முந்தல் கருங்காலிச்சோலை கிராமத்தில் அமைந்துள்ள கல்யாண முருகன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கொடியேற்றம் கடந்த சனிக்கிழமையன்று (7)நடைபெற்ற போது,பக்த அடியார்கள் பலர் கலந்து கொண்டனர். இதன் போது சுவாமி வெளி வீதி சுற்று இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம். உடப்பு குறூப் நிருபர்

## அனைத்து மக்களையும்...

பல்வேறு பகுதிகளில் வன்முறைகளில் ஈடுபட்டதோடு வாகனங்களையும் சொத்துக்களையும் சேதப்படுத்தியதாக அறிய வருகிறது.

## பால்மாவின் விலை...

600 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1,020 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 400 கிராம் பால் மாவின் விலை தற்போது 230 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித் பிரேமதாசவை...

தலைவருடன் பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, எரான் விக்ரமரத்ன, முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் சென்றிருந்தனர்.

பாதுகாப்பு படையினர் அவர்களை பாதுகாப்பாக மீட்டு வாகனங்களில் திருப்பி அனுப்பினர்.(பா)

## ஆர்ப்பாட்டக்காரர் மீதான தாக்குதலுக்கு...

"அமைதியான போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம், மேலும் இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தி வன்முறையில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்து தண்டிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து இலங்கையர்களும் அமைதியாகவும் நிதானமாகவும் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக...

மாறுபட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கடந்த 6 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் விசேட அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.இதன் போது இடைக்கால அரசு அமைப்பதற்காக பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை விலகுவது குறித்து ஆராயப்பட்டதோடு இந்த வாரம் பிரதமர் விலகுவார் என நம்பகரமாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பிரதமர் நேற்று விசேட அறிவிப்பொன்று வெளியிடுவதாக முன்னதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பிரதமர் பதவி விலகக்கூடாது என்று கோரி கட்சி ஆதரவாளர்கள் குழுவொன்று அலரி மாளிகைக்கு அருகில் போராட்டம் நடத்தியது. இதனை தொடர்ந்து அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து நாடு முழுவதும் குழப்ப நிலை உருவானது.

இந்த நிலையில் பிரதமர் தனது இராஜினாமாவை ஜனாதிபதியிடம் கையளித்ததாக பிரதமர் அலுவலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

அனைத்து கட்சிகளும் உள்ளடங்கிய சர்வகட்சி அரசு உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தான் இராஜினாமா செய்வதாக பிரதமர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி நிலைக்கு சர்வகட்சி அரசே உகந்தது என மகாசங்கத்தினரும் சட்டத்தரணிகள் சங்கமும் அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் சுட்டிக்காட்டியுள்ளன. அரசியலமைப்பிற்கு உட்பட்டதாக அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக தான் பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாகவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் எந்த அர்ப்பணிப்பிற்கும் தான் தயாராக இருப்பதாகவும் சர்வகட்சி அமைத்து சவால்களுக்கு முகங்கொடுக்க அனைத்து கட்சிகளும் முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நாடளாவிய ரீதியில்...

நடைமுறையிலுள்ள நிலையில் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குமான விடுமுறைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் அமைதியான சூழ்நிலையை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அனைத்து மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலங்களில் நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்பட்டிருக்கும் என கலால் வரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பிரதமர் பதவியை...

கட்சிகளும் உள்ளடங்கிய சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்குமாறு பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பிரதமர் பதவியை ஏற்குமாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதோடு முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும, மைத்திரிபால சிறிசேன,நிமல்சிறிபால டிசில்வா ஆகியோரின் பெயர்களும் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையில் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் சகல தரப்பும் உடன்படுவதாக இருந்தால் அந்தப் பொறுப்பை ஏற்கத் தயார் என்றார்.

## ரணகளமாகிய காலிமுகத்திடல்...

பொலிஸார் உரிய நடவடிக்கையை மேற்கொண்ட நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாரும் இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபட்டதுடன் நிலைமையை கட்டுப்படுத்த நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

நிலைமை மோசமடைந்ததையடுத்து இராணுவத்தினரும் காலிமுகத்திடலுக்கு அழைக்கப்பட்டனர்.

இரு தரப்பினருக்குமிடையிலான குழப்பநிலை உக்கிரமடைந்த நிலையில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா நேரடியாக காலிமுகத்திடலுக்கு வருகை தந்து நிலைமைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் பாதுகாப்புப் படையினருக்கு உரிய பணிப்புரைகளை வழங்கினார்.

குழப்பகரமான சூழ்நிலையை அடுத்து நேற்று மதியம் கொழும்பின் சில பகுதிகளுக்கு மட்டும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதும் சில நிமிடங்களில் அது மேல் மாகாணம் முழுவதற்குமாக அமுல்படுத்தப்பட்டது. அதனையடுத்து குழப்பகரமான நிலை உக்கிரமடைந்ததையடுத்து நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

எவ்வாறெனினும் நேற்றைய இந்த குழப்பகரமான நிலை எதிர்பாராத விதமாக அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட நாடளாவிய ஊரடங்குச் சட்டம் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்தது. கொழும்பின் பிரதான வீதிகள் பல மூடப்பட்டும் மேலும் பல வீதிகளில் பெரும் வாகன நெரிசலும் காணப்பட்டது.

நேற்று பொதுவான வேலை நாள் என்பதாலும் பாடசாலை தினம் என்பதாலும் கொழும்புக்கு கடமைக்காக வருகை தந்திருந்தவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்தது. பாடசாலை மாணவர்களும் அதேநிலையையே எதிர்கொள்ள நேர்ந்தது.

எவ்வாறாயினும் நேற்று மாலை வரை இருதரப்பு ஆர்ப்பாட்டக்காரர்களும் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்தனர். அதனைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டதுடன் தேவையான சந்தர்ப்பத்தில் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன. குழப்பநிலையை கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதேவேளை, இருதரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது அரசாங்கத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிலர் பேரை வாவிக்குள் தூக்கியெறியப்பட்டனர். அவர்கள் பயணம் செய்த பஸ்கள் சிலவும் சேதப்படுத்தப்பட்டும் எரிக்கப்பட்டுமுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

காலிமுகத்திடலில் நேற்று எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்த குழப்பகரமான சம்பவங்களையடுத்து அரசாங்கத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைந்தன. கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக சுகாதாரத் துறை ஊழியர்கள் உள்ளிட்டோர் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர். அதேவேளை கொழும்பின் ஏனைய பகுதிகளிலும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அமைதி நிலையை தோற்றுவிக்க மக்கள் பூரண ஆதர வழங்குக

எவ்வாறெனினும், அமைதி நிலையை தோற்றுவிப்பதற்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தது.

அரசாங்க தகவல் திணைக்களம் அதுதொடர்பில் நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையில் அமைதியை கடைப்பிடிக்குமாறு பாதுகாப்புப் படையினர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அந்த சம்பவம் தொடர்பில் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நேற்றுக்காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்காக பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மக்கள் குழுக்களாக அலரி மாளிகைக்கு வருகை தந்தனர். அதனையடுத்து அங்கு பூரண பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமருடனான அந்த கூட்டத்திற்குப் பின்னர், மேற்படி குழுக்கள் அலரிமாளிகையின் முன்புறமாக காலி வீதிக்கு வருகைதந்து குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டனர். அவர்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் அவர்கள் அதனையும் மீறி காலிமுகத்திடல் பகுதிக்கு விரைந்தனர். அங்கு அவர்களை தடுப்பதில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் அதனையும் மீறி அவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு சென்றுள்ளனர். அங்கு ஆர்ப்பாட்டத்திலீடுபட்டவர்களுக்கும் மேற்படி தரப்பினருக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்டனர்.

எவ்வாறெனினும் அதனையும் மீறி மோதல்கள் உக்கிரமடைந்துள்ள நிலையில் சம்பவத்தில் சுமார் 140 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். பல வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன் கட்டடங்கள் சிலவற்றுக்கும் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.அரசுக்கு ஆதரவாக வந்த பலர் தாக்கப்பட்டதோடு உள்ளூராட்சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் வீடுகளும் வாகனங்களும் தாக்கப்பட்டன.

எவ்வாறெனினும் மோதல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர். ஊடக காட்சிகள், சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஏனைய ஆதாரங்களுடன் வன்முறை மற்றும் குழப்பங்களை ஏற்படுத்துவதில் சம்பந்தப்பட்ட நபர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதற்காக விசேட விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

## நாட்டுமக்கள் எமக்கு...

(03 ஆம் பக்கத் தொடர்)

அந்த வகையில் சவால்களுக்கு முகங்கொடுத்து சவால்களை வெற்றிகொள்ள முயல்வது எமது கொள்கையாகும். ஒருபோதும் சவால்களை கண்டு தப்பியோடுபவர்கள் நாமல்ல.

எதிர்க்கட்சியானது தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடியை வைத்து தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வது இரகசியமல்ல. அவர்களுக்கு தேவை அதிகாரம் மட்டுமே. நாம் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோமென அழைப்பு விடுத்தால் அந்த அழைப்பை அவர்கள் உதறித்தள்ளுகின்றனர்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கு தீர்வுகாணும் வகையில் மகாநாயக்க தேரர்கள், கர்தினால், சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட சில அரசியல்வாதிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் சர்வகட்சி அரசங்கமொன்றை உருவாக்குவது தொடர்பில் யோசனைகளை முன்வைத்துள்ளன. அந்த யோசனைகளை முன்வைத்துள்ள அனைத்து தரப்பினருக்கும் எதிர்காலத்தில் நாடு முகங்கொடுக்கவுள்ள சவால்களை பொறுப்பேற்பதற்கு முற்படவேண்டும். அப்போதுதான் ஜனாதிபதிக்கு தடையில்லாமல் அதுதொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ளமுடியும்.

மக்களுக்கு எல்லா காலத்திலும் தலைவணங்கும் தலைவரென்ற வகையில் நாம் தற்போது என்ன செய்யவேண்டுமென்று மக்கள் கூற வேண்டும். மக்கள் பிரதமர் பதவி விலகக்கூடாது என கோஷமிடுகின்றனர். நான் இராஜிநாமா செய்ய தேவையில்லையென்பதையே அது காட்டுகிறது. அரசியலில் நான் தொடர்ந்து நாடு மற்றும் மக்கள் பக்கமே இருந்துள்ளேன்.

நாட்டின் எதிர்காலத்திற்காக அன்றுபோலவே நாளையும் மக்களோடு இணைந்து தீர்மானங்களை மேற்கொள்ள நாம் தயாராகவுள்ளோம். அந்த நம்பிக்கையிலிருந்து நாம் ஒருபோதும் மாறமாட்டோம். நான் எப்போதும் கூறுவதுபோல் முதலாவதும் இரண்டாவதும் மூன்றாவதும் எமது தாய்நாடு என்பது எமது தாரக மந்திரம்.

அந்தவகையில் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு நாம் விரைவில் தீர்வுகாண்போம். நாம் எதிர்காலத்தை எதிர்கொள்வோம். நாட்டுக்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்தையும் நாம் நிறைவேற்றுவோம். அதற்காக மக்கள் எம்முடன் தொடர்ந்தும் இணைந்திருப்பர் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# எரிவாயு விநியோகிக்குமாறு ஆமர்வீதியில் ஆர்ப்பாட்டம்




(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கேஸ் சிலிண்டர்களை உடனடியாக பெற்றுத் தருமாறு கோரி, ஆமர்வீதி மக்கள் நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் நண்பகல் முடிவிற்கு வந்தது.

காலை தொடக்கம் ஆமர்வீதியின் நான்கு பக்க போக்குவரத்துக்களையும் வழிமறித்த இவர்கள், கேஸ் சிலிண்டர்களை வீதிகளுக்கு குறுக்காக அடிக்கி வைத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தை அகற்றும் வகையில், கிரேண்ட்பாஸ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேஸ் கம்பனியுடன் பேசியதையடுத்து, பார ஊர்தியில் கேஸ் சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டன. எனினும், சிலிண்டர்களுக்கான தேவைகள் இன்னும் அப்பகுதியில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதுக்காக 11 மாணவர்கள் தெரிவு



(புத்தளம் தினகரன் நிருபர்)

சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விரு துக்காக புத்தளம் மாவட்டத்திலிருந்து இந்த வருடம் (2022) 11 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ஏ.எச்.எம்.எம்.ஷாபி தெரிவித்துள்ளார். கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையிலிருந்து 06 மாணவர்களும், பள்ளிவாசல் துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து 05 மாணவர்களும் இதற்கு தெரிவாகியுள்ளார்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சையை அண்மையில் ஜனாதிபதி செயலகம், கல்வி அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பன இணைந்து கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

# அடகுத் தங்க ஆபரண ஏலவிற்பனை

வரையறுக்கப்பட்ட பூஜாபிட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

- ❖ பூஜாபிட்டிய
- ❖ அங்கும்புர
- ❖ முல்லேகம
- ❖ உடகம

எனும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2021-01-31ஆம் திகதி உட்பட அன்றைய தினம் முதல் அடகு வைக்கப்பட்டு 2022-05-28ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க ஆபரணங்களை 2022-05-28ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 3.00 மணி வரை பூஜாப்பிட்டிய சங்க அலுவலக வளவில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவு பொது முகாமையாளர்.**
**வ/ப பூஜாப்பிட்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**பூஜாப்பிட்டிய.**

**2022-05-04ஆம் திகதி.**

திகதி 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4756
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,646,230.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,825,052.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 4 5 7 7 9 9

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 786
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,359,440.00
வெற்றி இலக்கினம் A வெற்றி இலக்கங்கள் 22 34 45 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,192,502.80

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1244
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,865,920.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் வெற்றி இலக்கங்கள் 0 5 3 2 7 7
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,226,158.80

**ராசீ சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0065
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,226,536.20
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 14 19 33 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00

**கோடி 25+ Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1104
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,035,080.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 251,171,674.00
ஆங்கில எழுத்து Q சுப்பர் நம்பர் 22 வெற்றி எண்கள் 17 31 46 57
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# புத்தளத்தில் புவித்தினம் அனுஷ்டிப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

"எங்கள் கிரகத்தில் முதலீடு செய்யுங்கள்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச புவித்தினம் புத்தளம் மணல்தீவு ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் கொண்டாடப்பட்டது.

புவித்தினம் தொடர்பாக பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மாணவர்கள் வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை காட்சிப்படுத்தி இருந்தனர். இத்தினத்தையொட்டி மாணவர்களுக்கான சித்திரப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளும் பாடசாலையின் நூலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

பாடசாலை அதிபர் ஏ.பீ.என் நிக்சன் நொயெல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு உடற்கல்வி ஆசிரியர் எம். எப்.எம். துபைலின் வழிகாட்டலில் இடம் பெற்றது. புவியின் சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சூழல் மாசடைவை தடுக்கும் நோக்கோடு அனைத்து நாடுகளிலும் 1970ம் ஆண்டு தொடக்கம் இப்புவித்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

1969ம் ஆண்டு அமெரிக்காவின் சென் பிரான்ஸிஸ்கோ நகரத்தில் நடந்த யுனெஸ்கோ மாநாடு சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக கலந்துரையாடியது.

இதன்போது, புவியின் அழகை சிறப்பாகவும், மாசு படுத்தாமல் பாதுகாக்கவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதென்ற தீர்மானத்துக்கிணங்க இத்தினத்தை கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்கா சுற்றுச் சூழல் நிபுணரான "கெலார்ட் நெல்ஷன்" 1970 ம் ஆண்டு ஏப்ரல் (22) சுற்றுச்சூழல் பற்றி அறிவை பரப்புவதற்கு தகுந்த நாளாக இதைப் பிரகடனப்படுத்தினார். அன்றிலிருந்து இன்றுவரை வருடந்தோறும் ஒரு கருப்பொருளை மையமாக வைத்து இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

2022ம் ஆண்டிற்கான கருப்பொருள் "எங்கள் கிரகத்திற்கு முதலீடு செய்வோம்" என்பதாகும்.

# புதையல் தோண்டிய சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேரை கவரக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய (07) மாலை கவரக்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள வெல்லாரகம காட்டுப் பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த சந்தேக நபர்கள் நான்கு பேர் கைது செய்யப்பட்டதுடன், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம்,கவரக்குளம், மிஹிந்தலை பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட 36,43,56,58 வயதுடயவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**ரூ. 35,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்**

17.00% 2025 ‘‘A’’ தொடர்களின் கீழ் ரூ. 15,000 மில்லியனையும், 18.00% 2027 ‘‘A’’ தொடர்களின் கீழ் ரூ. 20,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2022 மே 12ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.
**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 17.00% 2025 ‘‘A’’ | 18.00% 2027 ‘‘A’’ |
|---|---|---|
| ISIN* | LKB00425F013 | LKB00527E019 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 15,000 மில்லியன் | ரூ. 20,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 17.00% ஆண்டொன்றிற்கு | 18.00% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2021 யூன் 01 | 2022 மே 01 |
| **முதிர்வுத் திகதி** | **2025 யூன் 01** | **2027 மே 01** |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 01 யூன் & 01 திசெம்பர் | 01 மே & 01 நவெம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 7.7995 | ரூ. 100 இற்கு ரூ. 0.7826 |
| ஏல விற்பனைத் திகதி | 2022 மே 12, வியாழக்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2022 மே 12, வியாழக்கிழமை மு.ப. 11.00 மணி | |
| **தீர்ப்பனவுத் திகதி** | **2022 மே 17** | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஒவ்வொரு தொடர்/ ISIN தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய முன்வைக்கப்பட்ட தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளலாம்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட் | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

# பெறுகை அறிவித்தல்

**சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை (போதனா)**

**சிற்றுண்டிச்சாலை மற்றும் குரோசரியை நடைமுறைப்படுத்துதல் - 2022/2023**

01. கொழும்பு - 08, சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால், இவ் வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை மற்றும் குரோசரியை 2022 ஜுன் 01 முதல் ஒரு வருட காலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்காக, 2022 மே மாதம் 23 அன்று மு.ப.10.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இவ் வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில், 2022 மே மாதம் 20 அன்று பி.ப.2.00 வரை இதற்கான மாதிரிப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
02. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனு திறக்கப்படும் வேளையில் சமுகமளித்திருக்கலாம். கொழும்பு - 08, சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளரின் மாநாட்டு மண்டபத்தில் விலைமனு மூடப்பட்டு உடனடியாக அவை திறக்கப்படும்.
03. மீளளிக்கப்படாத ரூபா 2,000.00 இற்கான தொகையை இவ் வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தின் சிறாப்பரிடம் செலுத்தி, இதற்கான விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விலைமனுக்களைப் பதிவுத்தபாலில் அனுப்புதல் மூலம் அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதன் மூலம் இதில் பங்குபற்றலாம்.
05. விலைமனு தொடர்பான இறுதித்தீர்மானம், இவ்வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு**
**சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை**
**கொழும்பு - 08**


**The largest Job Market in Sri Lanka**

**www.observerjobs.lk**




**Widest reach for your employment advertisement**
**Email : info@observerjobs.lk Hotline: 1949**
**For more information**
**0777270012 / 0112429314**


(உயர்கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சு)

## நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம் (ACCIMT)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்திற்கு ஜெனிடோரியல் சேவைகளை வழங்குதல் - 2022/2023

நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்திற்கு ஜெனிடோரியல் சேவையை வழங்குவதற்காக பொதுத்துறையில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்ட மற்றும் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்து கொண்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு சேவைகள் வழங்குநர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தவிசாளர் இத்தால் அழைக்கிறார்.

1) விலைமனுக் கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

2) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடம் அல்லது 011-5677391 / 2650838 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022 மே 30ஆம் திகதி மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியில் எந்தவொரு வேலை நாளிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

3) ஒவ்வொரு விலைமனுவுக்கும் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமாக மூவாயிரம் ரூபாவை (3000.00) நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் (நிதி) அவர்களுக்குச் செலுத்தியதற்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்குச் சமர்ப்பிப்பதன் பேரிலும் மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்று மற்றும் தொடர்பு கொள்ளக் கூடிய விபரங்களை (தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் போன்றவை) உள்ளடக்கி நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு சமர்ப்பிப்பதன் பேரிலும் 2022 மே 09ஆம் திகதி முதல் 2022 மே 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.

4) 2022 மே 31ஆம் மு.ப. 11.00 மணி திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தவிசாளருக்கு ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

5) 2022 செப்டெம்பர் 27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் நிலையிலுள்ள நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அவர்களின் பெயரில் பெறப்பட்ட 80,000.00 ரூபாவிற்கான விலைமனுப் பிணையொன்று அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6) விலைமனுப் பிணையானது பின்வரும் முகவரகத்தினால் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்:
- இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் அல்லது
- இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் உத்தரவாதம் உறுதி செய்யப்பட்ட அந்நிய நாட்டு வங்கியொன்றில்.
- வங்கி வரைவு அல்லது ஏனைய வகையிலான பிணை முறிகள், உத்தரவாதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவனம்,**
**272, பண்டாரநாயக்க மாவத்தை,**
**கட்டுபெத்த, மொரட்டுவை.**
**தொலைபேசி: 2650838**
**தொலைநகல்: 2650662**

## அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## மாவட்டச் செயலகம் - மொனராகலை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மொனராகலை மாவட்டச் செயலக பெறுகைக் குழுவின் தலைவரால் 2022 ஜூன் மாதம் 01ஆந் திகதி பி.ப. 02.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். நிர்மாணத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை, கேள்விதாரர்களின் தகைமை மற்றும் நிர்மாணக் காலம் எனபன அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ❖ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பை மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட கேள்வி மாதிரிப் படிவத்தில் தயாரித்து பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை முத்திரைக்குறி பொறித்து நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது உதவி மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.
- ❖ 2022-05-11ஆம் திகதி முதல் 2022-05-31ஆம் திகதி வரை கேள்வி மாதிரிப் படிவங்களை சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 வரையான காலத்தில் மாவட்டச் செயலக கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ சாதாரண கடமை நேரங்களில் மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- ❖ பெறுகை முன்னோடிக் கூட்டம் 2022-05-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ❖ அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் ''மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், மொனராகலை'' எனும் முகவரிக்கு பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியொன்றை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதியை மொனராகலை மாவட்டச் செயலகத்திற்கு ரொக்கப் பணமாகவும் வைப்புச் செய்யலாம்.
- ❖ தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படுவர்.
- ❖ தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
- ❖ கேள்விப் படிவங்கள் கோரப்பட்டு முடிவடைந்த உடனடுத்து, அதாவது 2022 ஜூன் மாதம் 01ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்வதற்கு கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிக்கு இடமளிக்கப்படும்.
- ❖ கேள்விப்படிவத்தின் சகல பக்கங்களும் கேள்விதாரரினால் ஒப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறித்திருத்தல் வேண்டும்.
- ❖ அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டவர்களுக்கு கேள்விகளைச் சமர்ப்பிக்க முடியாது.
- ❖ ஒப்பந்தத்தை வழங்கப் பெறுதலுக்குரித்தான விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவைச் சார்ந்தது. மேலதிக விபரங்கள் தேவைப்படின் 055-2276067 / 055-2276234 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் விசாரித்தறியலாம். அதேபோல் கேள்விப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக 055-5674679/ 055-4936438/ 055-2276234 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மாவட்டப் பொறியியலாளரைத் தொடர்பு கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொடர்பு இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் ஒப்பந்தக் காலம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூபா) (வெட் சகிதம்) | கேள்விப் பிணை முறி (ரூபா) (செல்லுபடிக் காலம்) | பொருத்தமான தரம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| MON/ DS/ENG-B/C/2022/03 | நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சியம்பலாண்டுவ சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்திற்கான பிரவேச பாதையை நிர்மாணித்தல் (180 நாட்கள்) | 37.5 மில்லியன் | 375,125.00 (2022-09-27ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்) | கட்டிட நிர்மாணம் C3 அல்லது C4 | 10,000.00 |

**குணதாச சமரசிங்க,**
**மாவட்டச் செயலாளர்,**
**தலைவர், பெறுகைக் குழு.**
**மாவட்டச் செயலகம், மொனராகலை.**

---

கෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

விவசாயத்துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட கொத்தணிகளுக்கு (**ASMP Clusters**) உரங்களை **(Urea, TSP, MOP & Ino liquid Fertilizer)** வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்ட கொத்தணிகளுக்கு உரங்களை (Urea, TSP, MOP & Ino liquid Fertilizer) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

